06.03.2016 தவக்கால 4ம் ஞாயிறு திருப்பலி

திரு. D.V.R. ராஜா

இன்று நாம் தவக்காலத்தின் 4ம் வாரத்தில் பிரவேசிக்கிறோம். இது நமது வாழ்வியலையும், முறைமைகளையும், சீர்ப்படுத்தி செப்பனிடும் காலமாக அமைந்துள்ளது. எகிப்திலிருந்த அடிமை மக்களை கானான் தேசத்தில் சேர்க்க மோயிசனில் ஆரம்பித்து யோசுவா மூலம் நிறைவேற மன்னா பொழிதல் நின்றதும், சொந்த நிலத்தின் விளைச்சலை இறைவனுக்கு நன்றி நவிலும் விழாவாகவும், பழையனவற்றைக் களைந்து புதிய இதயத்தையும் சிந்தனையும் பெற்று இறைவனோடு ஒப்புரவாகவும் ஊதாரியாய் திரிந்தவன் தவற்றினை உணர்ந்து மன்னிப்புப் பெற்று தந்தையிடம் திரும்பியதும் இன்றைய இரு வாசகங்களும் உள்ளடக்கிய கருத்தாகும்.

நாம் பிறக்கையில் யாதொன்றையும் கொணரவில்லை, இறக்கும்போது கொண்டு செல்லவும் முடியாது. இந்த அவையங்களும் உருவங்களும் கூட கடவுளது சாயலே. அவரது சாயலை பெறப்பட்ட நாம் அவரை பிரதிபலிக்கின்றோமா? நாம் பிறந்த நொடி முதல் நமது நாட்கள் முடிவை நோக்கி எண்ணப்படுகிறது. மனிதர் இதை மறந்து இப்பூமியின் நிரந்தமாக இருப்பவர்களைப்போல் பாவித்து சுயநலமும், பேராசையும் கொண்டு அவற்றில் மூழ்கி துன்பத்தில் உழன்று பாவத்தை பரம்பரைச் சொத்தாக அடைகிறோம். எனவே நாம் தந்தைக்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் செய்த தவற்றிற்கு மன்னிப்பு வேண்டி இறைவனோடு ஒப்புரவாகி இறைவனின் அன்பில் நிலைத்து வாழ இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் அன்பின் கொடைகளை அளித்து என்றென்றும் நாம் அவரின் சொந்த பிள்ளைகளாக திகழ அருள்தர வேண்டி இத்திருப்பலியில் நம்மை தாழ்த்தி ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

விசுவாசிகளின் மன்றாட்டு

கருணைக் கடலே எம் இறைவா, தங்களை துறவு வாழ்வுக்கு அர்ப்பணித்து வாழும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் துறவறத்தார் அனைவரும் நித்திய சமாதானத்தில் நிலைத்து ஆன்ம சரீர நலன்களோடு விளங்கி மக்களை இறைவழியில் நடத்தி இறைப்பணியாற்ற இவர்களின் தேவைகளை நிறைவேற்றிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

உயிருள்ள தந்தையே இறைவா, ஆட்சியாளர்கள் சுயநலம் விடுத்து மக்களின் தேவைகளை அறிந்து நல்லாட்சி நடத்த கடைநிலை மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேலைவாய்ப்புகள் நல்கிட விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சிப் பெற விலையேற்றம் கணிசமாக குறைய வரப்போகும் தேர்தலுக்கு பிறகு நல்லதொரு அரசு அமைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

ஞானத்தின் ஊற்றே இறைவா, இளைஞர்கள் இளம் பெண்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சரியான பருவம் என்பதை உணர்ந்து தங்கள் கல்வி, அறிவு, திறமை அனைத்தையும் சரியான பாதையை நோக்கி செலுத்தும் ஞானத்தை இறைவன் அபறிவிதமாய் அளித்து பெற்றோருக்கும் இறைவனுக்கும் கீழ்ப்படிந்து வாழும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

சமாதானத்தின் ஊற்றே இறைவா, பங்கு மக்கள் இறைவனுக்கு ஏற்புடைய மக்களாய் விளங்கி அருட்கொடைகளைப் பெற்று சச்சரவுகள், நோய் நொடி, கடன் தொல்லைகள், குடும்பத்தில் பிரச்சனைகள் நீங்கி நன்றியுள்ளங் கொண்டவர்களாக விளங்கி, துன்புறுவோர்க்கும், நோயுற்றோருக்கும் செபிக்கவும் அன்றாடம், அன்றாடம் குடும்ப செபம் செய்யவும் உதவுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

13.03.2016 தவக்கால 5ம் ஞாயிறு திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

மனிதரைத் தீர்ப்பிட கடவுளைத் தவிர
வேறு யாருக்கும் உரிமையில்லை

**முன்னுரை**

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இந்த தவக்கால பயணத்தில் எசாயாவும், பவுலடியாரும் அடுத்தவரை தீர்ப்பிடாதவாறு வாழும்படி அறிவுறுத்துகிறார்கள். இயேசுவை எப்படியாவது சிக்கலில் மாட்டிவிட வேண்டுமென இல்லாத குற்றங்களையெல்லாம் வலை வீசித் தேடிக் கொண்டிருக்கும், தீய எண்ணங்களையே வாழ்வாகக் கொண்ட பரிசேயர்களுக்கு, விலைமாதுவின் வழக்கு, குற்றப்பழிக்கான துருப்பாக

அகப்படுகிறது. விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை, இயேசுவின் முன் நிறுத்தி, ”மோசேயின் கட்டளைப்படி இவளைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும். நீர் என்ன தீர்ப்பு சொல்கிறீர்?” என குதர்க்கமாகக் கேட்க, அவர்களின் தீய உள்மனதை அறிந்த இயேசு "உங்களில் பாவம் செய்யாதவன் இப்பெண்ணின்மீது முதலில் கல் எறியட்டும்" என்று சொல்ல, திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல், ஒவ்வொருவராய், எடுத்த கல்லை கீழே எறிந்துவிட்டு, தப்பித்தால் போதும் என்று நழுவி விடுகின்றனர். இயேசு அவளிடம், "நீர் குற்றவாளி என்று எவருமே தீர்ப்பிடவில்லையா" என்று கேட்க, "இல்லை ஐயா" என நன்றிகலந்த பய பக்தியுடன் சொல்ல, "நானும் உன்னைத் தீர்ப்பிடமாட்டேன், இனிமேல் பாவம் செய்யாதீர்" என மன்னித்து அனுப்புகிறார்.

ஒருவரைத் தீர்ப்பிட கடவுளைத்தவிர வேறு யாருக்கும் உரிமை இல்லை என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நிரூபிக்கிறார். ஆம், இயேசுவின் இரக்கம், பாவங்களை மன்னிக்கக் கூடியது. சவுலை மன்னித்து பவுலாக மாற்றிய இயேசுவைப் பற்றிய அறிவே, தாம் பெற்ற ஒப்பற்ற செல்வமாக கருதி, கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாக கருதினார் பவுலடியார். தவக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாமும் இறைவனது புதுவாழ்வையும், அவர்தரும் மன்னிப்பையும் அனுபவிக்க, பிறரைத் தீர்ப்பிடாது வாழ்ந்து, இறைவன் தரும் அருளை முழு நிறைவாகப் பெற்று வாழ்வாங்கு வாழ, பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இரக்கத்தின் கடவுளாகிய ஆண்டவரே, திருச்சபையை உலக அளவில் அற்புதமாக வழி நடத்திக் கொண்டிருக்கும் அனைத்து மக்களுக்கும் திருத்தந்தையாம் பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் ஆகியோருக்கு இரக்கத்தின் யூபிலி ஆண்டில், தூய ஆவியாரின் கொடைகளால் நிரப்பி வழி நடத்திடத் தேவையான பேரருளைத் தாராளமாகத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று, ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. நலமே நாடும் இறைவா, இனம், பணம், பதவி, பட்டம் அடிப்படையில் மக்களை வேற்றுமைப்படுத்தும் உலகப் பார்வையை அகற்றி யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற மனநிலை கொண்டு, அன்பின் மக்களாக வாழும் வரத்தை அருளுமாறு ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. கட்புலன்களுக்கு எட்டாத இறைவா, எங்களுடைய விசுவாசக் கண்களால் உம்மைக் கண்டு, உமது ஞானம், மனித அறிவுக்கும், இயல்புக்கும் எட்டாதவையாக இருப்பினும், உம் ஒரே மகன் இயேசுவின் வழியாக, உம்மையும் உமது அன்பையும் அருளவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. வல்லமைமிக்க நீதிபதியான இயேசுவே, உமது நீதிமன்றத்தில் எங்கள் நற்செயல், தீய செயல்களுக்கு ஏற்றபடி தீர்ப்பளித்து, அதற்கேற்ற கைம்மாறையும் பெறுவோம் என்ற உண்மையை உணர்ந்த நாங்கள், எங்கள் வாழ்வில் நற்செயல்களை மட்டுமே புரிந்து, உமது இறைத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் உண்மையான மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

## 20.03.2016 குருத்தோலை ஞாயிறு திருப்பலி

திரு. ஜான் சுரேஷ்

முன்னுரை

குருத்தோலை திருநாள் சோகமும் மகிழ்ச்சியும் கலந்து அமைந்த திருநாளை சிறப்பிக்க வந்திருக்கும் அன்பு இறை மக்களே, இன்றைய விழாவை நமது திருச்சபையானது இரு வேறு கண்ணோட்டத்தில் பார்க்கிறது.

இது ஒரு மகிழ்ச்சியின் விழா. காரணம் நம்மை பாவத்தின் தளைகளிலிருந்தும் சாத்தானின் பிடியிலிருந்தும் விடுவிக்க வீர இயேசு கல்வாரி நோக்கி சென்ற விழா என்பதால்,

இது ஒரு சோக விழா. பகையாலி சாத்தானுடன் போரிட்டு பாவத்தை வெல்ல தம்மையே பலியாக்கிக் கொண்டாரே என்பதால்,

இப்படி மகிழ்ச்சியும், சோகமும் கலந்த உணர்ச்சி திருவிழாவாய் மட்டும் இந்த நாள் அமையாமல் புனித வாரத்தில் புகும் நாம் புதுவாழ்வடைய இவ்விழா உதவ வேண்டும்.

இந்த நாளில் திருச்சபையானது இயேசுவின் பாடுகளை தியானிக்க இன்றைய நற்செய்தி அழைப்பு விடுப்பதால் இதனை பாடுகளின் ஞாயிறு என்றும் அழைப்பர். எனவே, நாமும் இயேசுவின் பாடுகளை தியானித்து இயேசுவுக்கு ஓசான்னா என்னும் வாழ்த்தொலி மூலம் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, எங்கள் அனைவரையும் நீர் வெளிப்படுத்துகின்ற இறைத்திட்டத்தின்படி எங்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், மற்றும் துறவறத்தார் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். அவர்களை உமது அன்புக்கரங்களால் அரவணைத்து அவர்களுக்குத் தேவையான அருளினைத் தந்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கமே உருவான இறைவா, மக்கள் பணி செய்யும் தலைவர்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். மக்கள் பணி ஆற்றுவது தாங்கள் சேவை அல்ல, மாறாக கடமை என்பதை அவர்கள் உணர்ந்து ஆக்கப்பூர்வமான பணிகளை தொடர்ந்து மக்களுக்கு செய்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் சிகரமே எம் இறைவா, சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு தம்மையே தாழ்த்திக் கொண்ட உம் திருமகனைப்போல நாங்களும் எங்கள் வாழ்வில் வெளிவேடத்தை துறந்து ஆணவம், அகந்தை, தற்பெறுமை போன்ற தீய எண்ணங்களை முற்றிலுமாக களைந்து வாழ வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. வாகை தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவராயிருங்கள் என்ற எமது திருத்தந்தையின் வார்த்தைக்கேற்ப நாங்கள் ஆன்மீக மற்றும் சமுதாய கடமைகளை செவ்வனே நிறைவேற்றி, ஏழையின் சிரிப்பிலே இறைவனை கண்டுகொள்ள உம்மை மன்றாடுகிறோம்.

## புனித வாரத்தின் துவக்கம் - குருத்து ஞாயிறு –திருப்பலி 20-03-2016

திரு. ஜான் அலெக்ச்

முன்னுரை : அன்புக்குரியவர்களே, தவக்காலத்தின உச்சக்கட்டமான புனித வாரத்தை இன்று நாம் துவங்குகிறோம். தன் சுகத்தை, மகிழ்ச்சியை ஏன் தன்னையே மறந்து ஒரு அடிமை போல (தெய்வம் என்ற நிலையை வலிந்து பிடித்துக் கொள்ளாமல் பிலிப்2, 6-11), நாம் விண்ணகம் சேர குரடுமுரடான வழி நடந்து நம்மை மீட்டவர் இயேசு. அவருடைய பாடுகளின் துவக்கம் தான் இந்த குருத்து ஞாயிறு. நமக்காக கொல்லப்பட கழுதை மீது ஏறிச்செல்கிறார். அவரின் பாடுகள் நம்மீது அவர் கொண்ட பாசத்தின் வெளிப்பாடு. இந்த பாடுகள் அவர்மீது திணிக்கப்பட்டதல்ல மாறாக அவரே விரும்பி ஏற்றுக்கொண்டது. இன்றைய முதல் வாசம் இதைதான் தெளிவுபடுத்துகிறது. எருசலேமில் பாடுகள் உண்டு என்பது அவருக்குத் தெரியும். கோன்றுவிடுவார்கள் என்பது அவருக்கு தெரியும். இன்று குருத்தோலை ஏந்தி ஒசான்னா பாடுவோர் ஓரிரு நாட்களில் இவனை ‘சிலுவையில் அறையும்’ என்பார்கள் எனவும் அவருக்கு தெரியும். இருந்தும் துணிந்து செல்கிறார். ஏன்? இலட்சியத்தை நிறைவேற்ற, நாம் மீட்படைந்து விண்ணகம் சேர. யாராவது துன்பப்படுவதற்கு, கொல்லப்படுவதற்கு ஆரவாரத்தோடு, மகிழ்ச்சியோடு பவனி செல்வார்களா? ஆனால் இயேசு சென்றாரே. பிரச்சனைகள் கண்டால் ஓடுகிறோமே சீடர்களைப் போல (மாற் 14, 50-52). அவற்றை தாங்குபவன், சந்திப்பவன், எதிர்கொள்பவன் தான் என் சீடன், சீடத்தி என்பதை இயேசு பலமுறை உரைத்திருக்கிறாரே (மத் 16,24). சிந்திப்போம். இதுவே குருத்து ஞாயிறு நம்மிடம் தொடுக்கும் கேள்வி. அந்த துணிச்சலுடன் அவரோடு நடக்க இந்த திருப்பலியில் தொடந்து செபிப்போம்.

விசுவாசிகளின் மன்றாட்டு :

1. நல்ல ஆயன் நானே, நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார் என்று சொல்லி மனமுவந்து பாடுகளை, சாவைச் சந்தித்த அன்பு இயேசுவே, துன்பங்களை கண்டு பின்வாங்காமல், அதை எதிர்த்து போராடும் துணிச்சலும் ஆற்றலும் எமக்குத்தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்
2. நாங்கள் மீட்படைந்து விண்ணகம் சேர பாடுகளை மனமுவந்து ஏற்றுக் கொண்ட எம் இயேசுவைப் போல நாங்களும் சமத்துவம் சகோதரத்துவம் மலர சமுதாயத்தில் துணிவுடன் போராடும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. **அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்**

4. **மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இயேசுவே உம்மை அறியாத மக்களால் நாங்கள் புறக்கனிக்கப்படும் போது அவர்களை வெறுக்காமல் அவர்களுக்காக மன்றாடும் மனதை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்**

24.03.2016 பெரிய வியாழன்

திரு. லூயிஸ்

**முன்னுரை**

இறையன்பில் இனியோரே, இயேசு கிறிஸ்துவின் இறுதி நாட்களையும், அவரது பாடுகள்-துன்பங்களையும் நினைவு கூர்ந்து கொண்டாடும் விழா புனித வியாழன் அல்லது பெரிய வெள்ளி ஆகும். கிறிஸ்தவ வழிபாட்டு ஆண்டில் வருகின்ற "உயிர்த்தெழுதல் முப்பெரும் விழாவின்" (Easter Triduum) முதல் நாள் ஆகும். புனித வெள்ளியும், புனித சனியும் தொடர்ந்து வரும் நாட்களாகும். இம்மூன்று நாட்களிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் மறைசார்ந்த புனித நிகழ்வுகளைக் கொண்டாடுகின்றனர்.

பெரிய வியாழன் அன்று மூன்று முக்கிய நிகழ்வுகள் நினைவுக் கூறப்படுகின்றன.

இயேசு இறுதி இராவுணவு அருந்தி-நற்கருணையை ஏற்படுத்தல்

இயேசு தம் சீடர்களின் காலடிகளைக் கழுவுதல்

இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தல்

இயேசு தம் வாழ்நாளில் பலமுறை சாதாரண மக்களோடு குறிப்பாக சமுதாயத்தில் தாழ்ந்தவர்களாக கருதப்பட்ட மக்களோடு கூட அமர்ந்து உணவு உண்டார் எனும் செய்தி நற்செய்தி நூல்களில் உள்ளது. கூடியிருந்து உணவு உண்பது மக்களோடு தம்மை ஒன்றுப்படுத்தி கொள்வதன் அடையாளம் ஆகும். மேலும் அது ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள நட்புக்கும் அறிகுறி ஆகும். "பாஸ்கா" விழாவின் நினைவாக கொண்டாடப்படும் விருந்தின் ஒருமித்த உறவுக்கு இயேசு புது அர்த்தம் (அதாவது அன்பின் பாஸ்கா) கொடுக்கின்றார். அப்பத்தையும்-இரசத்தையும் தன் உடலாகவும்-இரத்தமாகவும் இயேசு தன் நினைவாக நற்கருணை மூலமாக அமைத்தார். இந்நற்கருணை விருந்தில் ஒவ்வொருவரும் இயேசுவோடு மேலும் நெருங்கிய வகையில் பிணைப்பு கொண்டு, அவரது மரணம்-உயிர்ப்பு ஆகிய விசுவாச நிகழ்வுகளில் கடவுளின் பிள்ளைகளுக்குரிய நிலையில் பங்கேற்கின்றனர்.

இயேசு தம் சீடரின் காலடிகளைக் கழுவிய நிகழ்ச்சி ஒரு புரட்சிகரமான நிகழ்வாகும். தம் சீடர்களின் மதிப்புக்கும், வணக்கத்திற்கும் உரியவராயிருந்த இயேசு ஓர் அடிமையின் (வேளையாளின்) பணியாகிய காலடிகள் கழுவும் செயலைச் செய்தார். இதன்மூலம் ஒருவர் மற்றவருக்கு பணி செய்கின்ற மனநிலையைத் தம் சீடர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று இயேசு செயல்முறையில் காட்டினார். இன்று அடையாள முறையில் நிகழ்கின்ற இச்சடங்கின் பொருள், கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளும் மக்கள் பிறரை அடக்கி ஆளவேண்டும் என்னும் பாணியில் செயல்படாமல் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பிறருக்குப் பணி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். 2013, மார்ச் 13ம் நாள் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் மார்ச் 25, பெரிய வியாழன் அன்று "கசால் தெல் மார்போ" சிறைச்சாலையில் 12 சிறைக் கைதிகளின் கால்களைக் கழுவி சிறந்த உதாரணம் காட்டியுள்ளதை நாம் நினைவில் கொள்வோம்.

பணி செய்வதே கிறிஸ்துவின் சீடருக்கு அடையாளமாக இருக்க வேண்டும் என்பதன் சிறந்த வெளிப்பாடே குருத்துவம். இயேசுவின் திருவுடல், திரு இரத்தம் ஆகியவற்றைத் திருப்பலியின்போது கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து, இயேசுவின் பெயரால் செயல்படுவதற்கு, இயேசு திருத்தூதர்களையும்-சீடர்களையும் தேர்ந்து கொண்டதுபோல, வரலாற்றில் தொடர்ந்து பணியாளர்களைத் தேர்ந்து கொள்கிறார் என்பதே கிறிஸ்தவ நம்பிக்கை. இந்தப் பணியாளர்களே "குருக்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். இயேசு தம் பாடுகளை ஏற்பதற்கு முந்தின நாள் குருத்துவத்தை ஏற்படுத்தி நற்கருணை கொண்டாட்டத்தை நிகழ்த்தும் பொறுப்பையும் மக்களுக்கு கடவுளின் செய்தியை அறிவித்து அவர்களுக்குப் பணிசெய்யும் பொறுப்பையும் குருக்களிடம் ஒப்படைத்தார் என நமது கத்தோலிக்க விசுவாசம் எடுத்துரைக்கிறது.

இவையனைத்துக்கும் காரணம் "அன்பு" கடவுளும் கடவுளின் ஒரே மகனான கிறிஸ்து இயேசுவும் மனுக்குலத்தின்மீது கொண்ட அன்பே காரணம். எனவே, அந்த அன்பை நாளும் சுவைத்து, நம் வாழ்வில் மிளிரச் செய்வோம். நம்மில் மலரச் செய்வோம்-நமக்குள் ஒளிரச் செய்வோம்.

25.03.2016 பெரிய வெள்ளி (திருச்சிலுவை ஆராதனை)

திருமதி. டிலைலா சேவியர்

திருச்சிலுவை மரமிதோ, இதிலேதான் தொங்கியது உலகத்தின் இரட்சணியம்'வருவீா் ஆராதிப்போம்.

இறைஇயேசுவில் இனியோரே, எல்லாம் முடிந்தது என்றும் தந்தையே உமது கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என்று சொல்லி கல்வாரியில் சிலுவையில் நமக்காக உயிர்தந்த இயேசுவின் மரணத்தை நினைவில் நிறுத்தி திருச்சிலுவை ஆராதனைக்கு நம்மை தயாரிப்போம். மனித சாயலே இல்லாத அளவுக்கு அவரை (இயேசுவை) துன்புறுத்தி, எள்ளி நகையாடி, காரிதுப்பி, முள்முடி சூட்டி சாட்டையால் அடித்து உடலிலுள்ள இரத்த நாளங்கள் கிழிந்து இரத்தம் சிந்தி, பாரமான சிலுவையை சுமந்து இறுதியில் கல்வாரியில் உயிர் தந்த இயேசுவை மனக்கண்முன் கொண்டு வருவோம். பாவமன்னிப்புக்காக, பாவிகளுக்காக, பாவிகளை அன்பு செய்வதற்காக இரத்தம் சிந்தி உயிரைக் கையளித்த இயேசுவின் திருச்சிலுவை அடியில் அமர்வோம்.

கத்தோலிக்க திருச்சபையிலுள்ள அனைத்து மக்களும் பக்தியுடனும், விசுவாசத்துடனும் திருச்சிலுவையை ஆராதிக்க ஆலயங்களில் சடங்கு முறைகள் தகுந்த முறையோடு அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை இன்று பங்கு ஆலயங்களிலுள்ள அருட்தந்தையர்களோடு இணைந்து திருச்சிலுவைக்கு ஆராதனைச் செய்வோம். இறைவாக்கு வழிபாட்டில் வாசிக்கப்படும் இயேசுவின் பாடுகளின் தொகுப்பினை பக்தியோடும் உள்ளன்போடும் கவனித்து நம்முடைய அன்பை இயேசுவுக்கு வெளிப்படுத்துவோம். மூடப்பட்ட திருச்சிலுவை சடங்கினை அருட்தந்தையர்கள் பீடத்திற்கு கொண்டு வந்து முகம் குப்புற விழுந்து அவர்கள் திருச்சிலுவைக்கு ஆராதனை செலுத்தும்போது, இயேசு கெத்சமணி தோட்டத்தில் இரத்த வியர்வை வியர்த்து முகம் குப்புற விழுந்து செபித்ததை கண்முன்னே நிறுத்தி மனம் வருந்தி செபிப்போம். அன்று ஆலயத்தில் உள்ள அமைதி, நிசப்தம், துக்கம், வெறுமையான பீடம் இவைகளையெல்லாம் நாம் இயேசுவின்மீதும், அவர் மரித்த சிலுவையின் மீதும் கொண்டுள்ள பக்தியும், நம்பிக்கையும் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் நமக்காக வைக்கப்பட்டுள்ள திருச்சிலுவையை தகுந்த பக்தியோடும், ஆராதனையோடும் சிலுவையை முத்தமிடுவோம். இயேசுவின் திருச்சிலுவையை முத்தமிட்டு ஆராதனை செய்யும்போது, நம்மால் இயன்ற அளவு ஏழைகளின் நல்வாழ்விற்காக உதவும் வகையில் காணிக்கை தந்து பிறருக்கு உதவி செய்வோம்.

ஏழைகளுக்கு செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவில் கொள்வோம். இரக்கத்தின் காலமான இந்நாட்களில் ஏழைகளுக்கு நம்முடைய தியாகச் செயல்களின் மூலம் இரக்கம் காட்டுவோம். பெரிய வெள்ளி சிலுவை ஆராதனை அன்று ஆலயத்தில் பாடும் பாடல்களை பக்தியோடு பாடியோ அல்லது உள்ளத்தில் தியானித்தோ பாடல்கள் வழியாக ஆராதனை செலுத்துவோம். சிலுவையை ஒரு நிறுவனத்தின் அடையாளமாகவும், மதத்தின் சின்னமாகவும் மட்டும் பார்க்காமல் இலட்சியத்தின் சின்னமாக, விடுதலையின் சின்னமாக, மீட்பின் சின்னமாக, அன்பின் சின்னமாக, அவரணைப்பின் சின்னமாக, ஆறுதலின் சின்னமாக இருப்பது மறுக்க முடியாதது.

இன்று எத்தனையோ வீடுகளில் பாடுபட்ட சுருபத்தை வைக்க அஞ்சுகிறோம். துன்பங்கள் தொடர்ந்து வரும் என்று சிலுவையை வைக்க மறுக்கிறார்கள். சிலுவை ஆகாத சின்னம் என்று சொல்வதைக் கேட்டுள்ளோம். ஆனால் உண்மையென்ன வென்றால் துன்பமில்லாமல் இன்பமில்லை "ழே உசழளள ழே உசழறெ" நமது சுயநலமும், பேராசையும், வீண்பழியும், முன்தீர்மானங்களும் பிறரின்மீது தினம், தினம் தாங்கமுடியாத சிலுவையை சுமத்தாமல் பார்த்துக்கொள்வோம். பெரிய வெள்ளியான இன்று வெறும் சடங்குகளை பின்பற்றுவது மட்டுமல்லாமல் நம்மில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த திருச்சிலுவையின் நிழலின் நம்மை ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

திவ்விய இயேசுவே, தேவரீர் சிலுவையில் அறையப்பட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம்.

**இறுதிப் பாடல்**

பலியான செம்மறி பாவங்கள் எல்லாம் சுமந்து தீர்த்தவரே, உம் பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ பாக்கியம் பாக்கியமே, பரிசுத்தரே, படைத்தவரே-ஆராதனை, ஆராதனை.

## 26.03.2016 பெரிய சனிக்கிழமை இரவு பாஸ்கா திருவிழிப்பு திருப்பலி

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

**முன்னுரை**

நாம் நம் விசுவாசப்பிரமாணம் செபத்தில் பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்று செபிக்கின்றோம்.

திருப்பலியில் "பிலாத்துவின் ஆட்சியில் பாடுபட்டார். கல்லறை ஒன்றில் அடக்கப்பட்டார். மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். மரணத்தின்மீதே வெற்றி கொண்டார் என்று பாடுகின்றோம். அதே திருப்பலியில் எழுந்தேற்றத்திற்குப்பின் குருவானவர் இது விசுவாசத்தின் மறை பொருள் என்று சொன்னவுடன் அனைவரும் ஒன்றிணைந்து உரத்த குரலில் ஆண்டவரே தேவரீர் வருமளவும் உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம். உமது உயிர்ப்பையும் எடுத்துரைக்கின்றோம் என்று உறுதியளிக்கின்றோம். நாற்பது நாட்கள் நோன்பிருந்து செபம், தவம், இவற்றை கடைப்பிடித்து இயேசுவின் உயிர்ப்பு விழாவை கொண்டாட கூடியிருக்கும் நாம் இறை இயேசுவின்

மதிப்பீடுகளின்படி வாழ இறைவார்த்தையின் ஒளியில் பாவ இருளைவென்று விண்ணக வாசிகளாக நம் ஆன்மாவை வழிநடத்த உயிர்த்த ஆண்டவரின் துணை வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கு பெறுவோம்.

## 27.03.2016 உயிர்ப்பு விழா ஞாயிறு

திருமதி ராணி வில்சன்

இன்றைய விழா நாயகன் நாசரேத்தூர் இறை இயேசுவின் பெயரால் அனைவருக்கும் வணக்கங்களும் வாழ்த்துக்களும். ஒரு மனிதனுக்கு பிறப்பும் இறப்பும்தான் அவனது வாழ்நாளில். சிலர் மட்டும் தன் வாழ்வை சாதனைக்கு வித்திடுகிறார்கள். ஆனால் இறை இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு மட்டும்தான் உலக வரலாறு ஆனது. இந்த வரலாறு இறை இயேசுவினாலேயே தனது குறுகிய வாழ்நாளிலேயே தனது பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றி அறிவித்திருந்தார். இதை அவரோடு வாழ்ந்து உண்டு, குடித்த திருத்தூதர்கள் சீடர்கள் உணரவில்லை. இதனை அவர்கள் முழுமையாக உணர்ந்த பிறகு அனுபவித்த பிறகுதான் தூய ஆவியின் வல்லமை பெற்று திருத்தூது அறிவித்தனர். அதைத் தான் இன்றைய வாசகங்களும், நற்செய்தியும் நமக்கு தெளிவாக்குகிறது. நினைவு தெரிந்த நாள்முதல் நாமும் பாடுகள் மரணம் தியானித்து, உயிர்ப்பு விழாவை கொண்டாடி மகிழ்கிறோம். ஆனால் அது அர்த்தமுள்ளதா? வாழ்வாக்குகிறோமா? தெரியவில்லை. இதை புனித பவுலடிகளார் இன்று நமக்கு அறிவுறுத்துகிறார். குழந்தைக்குத்தான் பால். வளர்ந்தவருக்கு? நாம் குழந்தையா? வளர்ந்தவர்களா? நாம் தான் தீர்மானிக்க வேண்டும். அதுமட்டுமல்ல அச்சங்கொண்டு ஆண்கள் எல்லாம் ஓடி ஒளிந்தபோது எது நேர்ந்தாலும், துணிச்சலோடு இரவெல்லாம் தூங்காமல் பொருட்களை சேகரித்து, கல்லறைக்கு ஓடினது பெண்கள். உயிர்ப்பின் மகிமையை அனுபவித்து, சான்று பகர்ந்தவர்கள் பெண்கள். யாருடைய பேச்சு, சாட்சி செல்லாது என சட்டம் போட்டாங்களோ, அதே பெண் இனம்தான் முதல் சாட்சியானது முதல் நற்செய்தி அறிவிப்பானது.

நம் உள்ளத்திலும் பல வினாக்கள் எழுந்தாலும், இறைஇயேசுவின் உயிர்ப்பு சாவையும், சாத்தானையும் வென்று புதிய நம்பிக்கையும், புதிய பார்வையும் வாழ்வையும் நமக்கு கொடுத்துள்ளது. அது தன்னலத்தினின்று விடுவித்து தற்பெருமையைத் தடுத்து மூடநம்பிக்கையை தவிர்த்து, திருமுழுக்கு பெற்ற நாம் அனைவரும் முழுமையான மாற்றம் பெற்றவர்களாக, புதுவாழ்வு கொண்டவர்களாக மகிழ்ந்து வலம் வருவோம். இறைவனுக்கு நன்றி சொல்லி வாழ்த்துவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தாயும் தந்தையுமான இறைவா, புதிய வாழ்வையும் புதிய பார்வையும் கொண்ட எங்கள் திருஅவை, அதன் அருட்பணியாளர்கள் அனைவரும் அன்று திருத்தூதர்கள் பெற்றுக்கொண்ட அதே தூய ஆவியின் வல்லமையால் நிரப்பப்பெற்று, திருத்தூது அறிவித்து புது உலகு படைக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

1. அன்பே இறைவா, குடும்பத்தில் பல தடைக்கற்கள் உள்ளன. அவற்றை தகர்த்தெறிந்து, அனைத்து குடும்பங்களும் ஊனியல்புக்கேற்ப நடக்காமல், இறையியல்பில் நடந்து இன்றுபோல் என்றும் மகிழ்ந்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. சமத்துவத்தை பறைசாற்றிய இறைவா, ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள், வேறுபாடுகள் சாதிசண்டைகள், சமய சண்டைகள், தீவிரவாதங்கள் ஒழிய வேண்டும். மனிதத்தை அச்சுறுத்தும், குணமாகாத நோய்கள், அந்நோயை உண்டாக்கும் கிருமிகள் ஒழிய வேண்டும். உலகமும், எங்கள் இந்திய நாடும், குறிப்பாக தமிழகம் நல்ல சிந்தனையோடும், ஆரோக்கியத்தோடும் சமாதானத்தோடும் ஒற்றுமையோடும் வாழ்ந்து மகிழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி 2: விசுவாசத்தில் வளர...
# சிலுவைப் பாதை

## 1. இரக்கத்தின் ஆண்டில் பாடுகளின் தியானம்

அருட்தந்தை அந்தோணி கிறிஸ்டி சச.

இறை இரக்கத்தின் முகம் இயேசு. இரக்கத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடு இறையேசுவின் வாழ்வும், சிலுவை சாவுமாகும். இறைத்தந்தை இவ்வுலகின்மீது எந்த அளவுக்கு அன்புக்கொண்டாரென்றால் தன் ஒரே பேரான மகனையும் இவ்வுலகம் உய்ய வேண்டுமென்று முழுமையாய் கையளித்தார் என்பது நாம் அறிந்த உண்மை. அறிந்திருக்கிறோம், உணர்ந்திருக்கிறோமா? புரிந்துக்கொண்டுள்ளோம், உள்வாங்கியிருக்கிறோமா? சிந்தித்திருக்கிறோம், நம் வாழ்வை அதன் அடிப்படையில் சீரமைத்திருக்கிறோமா?

அன்பிற்கினிய இறைச்சமூகமே, இறை இரக்கத்தின் ஆண்டிலே இறைவனின் இரக்கத்தை குறித்து சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். இத்தவக்காலம் அந்த சிந்தனையை இன்னும் பன்மடங்கு ஆழப்படுத்துகிறது. இயேசுவின் பாடுகள் இரக்கத்தின் வெளிப்பாடாகும். இறைவனின் இரக்கத்தை முற்றிலுமாய் பெற்றவர்கள் நாம். அதை அறிந்திருக்கிறோமோ இல்லையோ, இறை இரக்கம் நம்மைச் சூழ்ந்துள்ளது. இந்த சில மணித்துளிகள் இயேசுவோடு பயணிப்போம். அவரது பாடுகளின் ஒவ்வொரு படியும் நம் திருத்தந்தை நமக்கு நினைவுப்படுத்தியுள்ள இறை இரக்கத்தின் செயல்பாடுகளை நமக்கு நினைவூட்டுகிறது. திருத்தந்தை நமக்கு எடுத்துக்கூறும் 14 இரக்கத்தின் செயல்பாடுகள் இந்த 14 நிலைகளிலே நமக்கு அழைப்புகளாய் வெளிவருவதை உணர்ந்து செபிப்போம்.

**பாடல்:**

### முதல் நிலை: இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, நீர் கைகள் கட்டப்பட்டு குற்றவாளியாய் இரக்கமற்ற யூதர்களால் பிலாத்துவின் முன் நிற்பதை காண்கின்றோம். அநியாய தீர்ப்புக்கும், பொய்யான வழக்குகளுக்கும், ஏழ்மைக்கும், வறுமைக்கும், அரசியலுக்கும், மற்றெல்லா தீமைகளுக்கும் இரையாகி இன்று சிறைகளிலே வாடும் பலரையும் எண்ணி செபிக்கின்றோம். தெரிந்தே தீமைக்கும் பொய்மைக்கும் உடன்சென்ற நேரங்களுக்காக வருந்துகின்றோம், தீமையையும் பொய்மையையும் எதிர்த்து நிற்காது அவற்றை வெல்ல விட்ட நேரங்களுக்காக வருந்துகின்றோம். (அமைதி)

**சிந்தனை:** சிறையிலுள்ளோரை சந்திப்பதை ஒரு இரக்கத்தின் செயல்பாடாக இவ்வாண்டு நமக்கு முன்னிறுத்துகிறது. சிறைப்பட்டோரை சென்று சந்திக்க வாய்ப்பு இல்லையென்றாலும் தங்கள் வாழ்வின் சூழல்களிலே, குடும்பங்களிலே, பணியிடங்களிலே, தீமைக்கும் பொய்மைக்கும் கைதிகளாய் வாழும் சகோதர சகோதரிகளை இனம் கண்டு அவர்களுக்கு ஆதரவாய், ஆறுதலாய், வழிகாட்டுபவர்களாய் நாம் மாற அழைக்கப்படுகின்றோம். நாம் தயாரா?

### இரண்டாம் நிலை: இயேசு சிலுவையை ஏற்கிறார்.

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, உம் இறைநிலை துறந்து மனிதனாகி, குடும்பத்தை துறந்து நாடோடியாய் நற்செய்தி பரப்பி, அன்புக்குரியோர், உம்மை நேசித்தோர் என்று நின்றுவிடாமல் எல்லா மக்களுக்கும் இறைவனின் இரக்கத்தை பகிர்ந்தளிக்க உமது வாழ்க்கையை முழுவதுமாய் கையளித்தவரே, நீர் செய்த அனைத்து நன்மைக்கும் நாங்கள் உமக்கு அளிக்கும் பரிசு இந்த சிலுவையே. வீடின்றி, வாசலின்றி, உமக்கென உறவின்றி தவித்த உம்மை நாங்கள் படுத்தும்பாடு இன்றும் தொடர்கிறது. வீடின்றி, வசதியின்றி வாய்ப்பின்றி வாடுவோரை இன்னும் அதிகமாய், முன்னேற்றம், வளர்ச்சி என்ற பேரிலே ஓரங்கட்டும் போக்கை எண்ணி வருந்துகின்றோம். வறுமையிலும் இயலாமையிலும் தங்கள் இடமிழ்ந்து வாடும் மக்களை எண்ணி அவர்களுக்காக செபிக்கின்றோம்.

**சிந்தனை:** அந்நியரை வரவேற்பதும், வீடற்றோருக்கு தஞ்சமளிப்பதும் இரக்கத்தின் செயல்பாடாக நமக்கு முன்னிறுத்தப்படுகிறது. அனாதைகள், உடல் ஊனமுள்ளவர்கள், வயதானவர்கள் என எத்தனை வகையினர் இன்று வீடற்றவர்களாய் தனிமைப்படுத்தப்பட்டு வீதியில் நிற்பதை காண்கின்றோம். முன்னேற்றம் என்ற பெயரிலே சாலைகளும்,

பாலங்களும் எத்தனை வசதி வாய்ப்பற்ற எளியோரின் இல்லங்களை சூரையாடியுள்ளன. சிதைந்து போன இம்மனங்களுக்கு மேலும் சிலுவைகளாய் மாறாமல் இரக்கம் காட்டி நம்மால் முடிந்த சிறு சிறு நன்மைகள் செய்ய நாம் தாயாரா?

### மூன்றாம் நிலை: இயேசு முதல் முறை தரையில் விழுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, உம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டவர் நீர். வலுவின்மையிலே இறைவனது இரக்கத்தை வற்றாத சீவநதியாய் எண்பித்தவர் நீர். அந்த இரக்கத்தின் வலுவின்மையிலே பாவத்தின் பாரம் உம்மை விழச்செய்தது. நன்மையை வீழ்த்த தீமை என்றும் காத்தே நிற்கிறது என்பதை உணர்கின்றோம். நன்மையில் வாழ எண்ணினாலும் குழப்பங்கள் எங்களை சூழ்ந்துகொள்ளும் நேரங்களை எண்ணி உம்மிடம் ஒப்புக்கொடுத்து செபிக்கின்றோம். எத்தனை குழப்பங்கள் சூழ்ந்தாலும் நன்மையில் நிலைகொள்ளும் மனதிடம் பெறும் வரம் தாரும். தங்கள் வாழ்வில் நன்மையில் வாழத்துடித்தும், குழப்பங்கள் சூழ்ந்து என்னால் முடியுமா? இது தேவை தானா? நான் நல்லவனாய் நல்லவளாய் வாழ்வதில் பொருளேதும் உண்டா? நான் தோற்றுப்போவேனா? என்றெல்லாம் குழம்பித் தவிக்கும் மனங்களை உமது பதம் சரணாக்கி செபிக்கின்றோம்.

**சிந்தனை:** குழப்பத்திலுள்ளோரை ஆற்றுப்படுத்துவது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. மீண்டும் மீண்டும் தோல்வியுற்று முயன்றும் முயன்றும் முன்னேறாது, துயரங்களின்மேல் துயரம் அனுபவித்து குழம்பி இருக்கின்றவர்களை இனம்கண்டு அவர்களுக்கு வாழ்வில் வெளிச்சம் தரும் வகையில் ஆலோசனையும் வழிவகையும் ஏற்படுத்தி தரவேண்டும் என்று இறைவனின் இரக்கம் நம்மை அழைக்கின்றது. ஆலோசனை ஆவியாரிடமிருந்தே வரும், ஞானம் இறைவனின் வார்த்தையிலிருந்தே வரும். இவற்றை பெற்றவர்களாய் குழப்பத்திலுள்ளோரை உற்சாகப்படுத்த நாம் தயாரா?

### நான்காம் நிலை: இயேசு தன் தாயைச் சந்திக்கிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, உம் தாயின் சந்திப்பு உம் சிலுவையின் வழியில் உமக்கு புத்துணர்வு அளித்திருக்கும். இறைசித்தத்திற்காகவே வாழ்நாள் முழுவதும் தியாகச்செம்மலாய் வாழ்ந்த உம் தாய் உம்மை பாலூட்டி, சீராட்டி, உண்ண உணவளித்து வளர்த்தது மட்டுமன்றி, இறையுணர்வும் ஊட்டி வளர்த்தாள். கானாவூரிலே இரசம் தீர்ந்தபோது, இல்லை என்ற வார்த்தையே இருக்கக் கூடாது என்று உம்மை செயல்பட அழைத்தாள். இதோ நீர் ஈடுபட்டிருக்கும் இந்த இறுதிக்கட்ட செயல்பாட்டிலும் தான் உம்மோடு இருப்பதை உமக்கு நினைவூட்ட வந்துவிட்டாள். எவ்வளவு அழகான தாயுள்ளமது. எவ்வளவு பாசமான தாயின் நெஞ்சமது. அந்த பாசவுள்ளத்தை நாங்கள் உணர்ந்திடாத நேரங்களுக்காக வருந்துகிறோம். தாயாம் மரியாளை புரிந்துக்கொள்ளாத தருணங்களுக்காக வருந்துகிறோம். அவரை குறித்து அவதூறு கூறும் சகோதர சகோதரிகளை எண்ணி செபிக்கின்றோம்.

**சிந்தனை:** பசித்தோருக்கு உணவளிப்பது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. உணவளிப்பது தாயின் குணம், நமக்கு உணவளிக்கும் தாயான இறைவனின் துணையுணர்ந்து இறையன்னையின் அதே பாசத்தோடு துன்புறும் மக்களைத் தேடிச்சென்று உணவளிக்கும் உள்ளுணர்வு தந்தருளும். வெறும் இயற்கை சீற்றங்களுக்கும் இடர்பாடுகளுக்கும் மட்டும் காத்திராமல் இறைவனின் இரக்கமும் அன்பும் நம்மை உணவளிக்கும் தாயுள்ளம் பேண அழைக்கின்றன. நாம் தயாரா?

### ஐந்தாம் நிலை: இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, நீர் உம் பொதுவாழ்வைத் தொடங்கிய நாள் முதலே உமது சிலுவைப்பாதையையும் தொடங்கிவிட்டிருந்தீர். மரியாள் சூசையின் அரவணைப்பில் இறைவனின் இரக்கத்தை முழுமையாய் உணர்ந்திருந்த நீர் பொது வாழ்வை தொடங்கியபோது உமக்கு கிடைத்ததெல்லாம் ஏமாற்றமும், தோல்வியும், புறக்கணிப்பும் புரிந்துக்கொள்ளாமையும் பொல்லாப்பும்தான். ஆயினும் நீர் பொறுத்துக்கொண்டீர். முன்பின் தெரியாத உமக்கு ஏன் உதவ வேண்டும் என்று முரண்டுபிடித்த சிமியோன், கட்டாயத்தின் பேரிலே உமது சிலுவையை தன் தோளேற்றினாலும் உமது முகத்தை பார்த்து புரிந்துக்கொண்டிருப்பார், நீர் பொறுத்துக் கொண்டுள்ள துயரம்

எவ்வளவென்று. எமக்கெதிராய் தீமை செய்வோரை பொறுத்துக்கொள்ளும் திடம் தாரும். நன்மையால் தீமையை வெல்லவும் ஒருபோதும் தீமையை வெல்லவிடாமல் வாழவும் வரம்தாரும். பல இன்னல்களினாலும் அநீதிகளினாலும் இடர்படும் மக்களை உமது பதம் சமர்ப்பித்து செபிக்கின்றோம்.

**சிந்தனை:** அடுத்தவரின் தவறுகளை பொறுத்துக்கொள்ளுதல் இரக்கத்தின் செயல்பாடாய் முன்னிறுத்தப்படுகிறது. இறைவன் எந்தளவுக்கு நமது தவறுகளை பொறுத்துக்கொண்டுள்ளார் என்பதை நாம் உணர்ந்திருந்தால் அடுத்தவர் நமக்கு எதிராய் செய்யும் தவறுகள் எம்மாத்திரம் என்பது நமக்கு புரியும். அடுத்தவரின் தவறுகளை பெரிதுப்படுத்தாது, என் இரக்கத்திற்கும் அன்பிற்கும் தகுதியுடையவர்களாக இருந்தால் மட்டுமே என் இரக்கத்தையும் அன்பையும் அளிப்பேன் என்ற மனதை மாற்றவும் தவறிழைத்தோருக்கும் இரக்கம் காட்டவும் நாம் அழைக்கப்படுகிறோம். நாம் தயாரா?

## ஆறாம் நிலை: இயேசுவின் முகம் துடைக்கிறார் வெரோணிக்காள்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, நீர் துன்புறுகிறீர் தோற்றம் குலைகிறீர், வியர்வையிலும் இரத்தத்திலும் உழல்கின்றீர் என்று உணர்ந்த நேரத்திலே வெரோணிக்கா தான் பெண் என்ற நிலையையும் தாண்டி, தான் வலுவற்றவள் என்ற சிந்தனையும் தாண்டி, தன்னால் பெரிய காரியம் ஒன்றும் செய்துவிட இயலாது என்ற உண்மையையும் தாண்டி, உம் முகம் துடைக்க முன் வருகிறார். எம்மை சுற்றி இன்று உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் உடல் நலம் குன்றி வாழ்வோர் எத்தனை எத்தனை பேர். அவர்களுக்கு எங்களால் எதுவும் செய்ய இயலாது. பெரியதோர் மாற்றத்தை எமது உடனிருப்பு தராது என்னும் சிந்தனைகளால் அவர்களை சற்றும் பொருட்படுத்தாமல் இருந்த நேரங்களை நினைத்து வருந்துகின்றோம். வயதானவர்கள் பிறரை சார்ந்திருப்பவர்கள், தங்கள் வலிமையை இழந்தவர்கள் ஆகியோரை நாங்கள் இரக்கத்தோடு சந்திக்கவும் உம் அன்பை பகிர்ந்தளிக்க மறந்ததற்காக மனம் வருந்துகின்றோம். துன்புறும் இவர்களை உம் பதம் சமர்ப்பித்து செபிக்கின்றோம்.

**சிந்தனை:** நோயாளிகளை சந்திப்பது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. நோயுற்றோர், உடல் உள்ள வலியோடு வாழ்வோர், வயதானோர், ஆதரவின்றி தவிப்போர் சிலுவை சுமந்து செல்லும் இயேசுவின் இரத்தம் படிந்த முகத்தை நமக்கு நினைவூட்ட வேண்டும். அவர்களுக்கு பெரும் காரியங்கள் நாம் செய்ய இயலாவிட்டாலும் அவர்களோடு சில மணித்துளிகள், அவர்கள் உள்ளத்திற்கு புத்துணர்வு அளிக்கும் சில வார்த்தைகள், அவர்கள் ஆறுதலடைய நமது உடனிருப்பு இவற்றை தந்திட நம்மை இக்காலம் அழைக்கின்றது. நாம் தயாரா?

## ஏழாம் நிலை: இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, ஒளியாய் நீர் வந்தீர். இருளின் மக்கள் நாங்கள் உம்மை உணரவில்லை. இறைமகனாய் நீர் இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் எமக்கு எடுத்துரைத்தீர். ஆனால் எங்களது அறிவின்மையால் நாங்கள் உம்மை அறிந்துக்கொள்ளவில்லை. அறியாமையிலே நாங்கள் செய்யும் தவறுகள் தான் எத்தனை எத்தனை. மீண்டும் மீண்டும் உம்மை இடரச்செய்தோம், புறந்தள்ளினோம், புறக்கணித்தோம். ஆனால் இன்று உம் அன்பையும் இரக்கத்தின் ஆழத்தையும் உமது சிலுவை பயணத்தினாலும் அதன் தியாகத்தினாலும் நாங்கள் உணர்ந்துக்கொண்டோம். எம் அறியாமை என்னும் திரை விலகுகிறது. நீரே எம் அறிவின் கண்களை திறந்து ஞானத்தின் ஒளியை ஏற்றுகின்றீர். உம் ஆவியின் வல்லமை எம்மிலே உமது ஞானத்தை ஒளிரச்செய்கிறது. ஆயினும் இன்னும் அறியாமையிலே உள்ள மக்களின் வாழ்நிலையை எண்ணி வருந்துகிறோம். அதற்காய் எம்மால் முடிந்தவற்றை செய்யத்தவறிய நேரங்களுக்காக மன்னிப்பு வேண்டுகிறோம். அறியாமை என்னும் இருளில் உழன்று வரும் மக்களுக்காய் உம்மிடம் மன்றாடுகின்றோம்.

**சிந்தனை:** அறியாமையிலுள்ளோருக்கு அறிவூட்டுவது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. படிப்பறிவின்றி உள்ளோர்க்கு நாம் செய்ய முற்படுவது என்ன? நம்மால் முடிந்தவரை அறியாமையில் இருப்பவருக்கு அறிவூட்ட நாம் செய்துள்ளது என்ன? அறிவு வளர்ச்சிக்கும் உண்மையான கல்விக்கும் நாம் இதுவரை செய்துள்ள பணியென்ன? படிப்பறிவற்ற ஒருவர் படிப்பறிவு பெற நம்மால் ஏதாவது செய்ய இயலுமா என்று சிந்திக்க நம்மை இந்நிலை அழைக்கின்றது. நாம் தயாரா?

## எட்டாம் நிலை: இயேசு யூதப்பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, சிலுவையின் பாரம், ஏமாற்றத்தின் கொடுமை, தனிமையின் தவிப்பு, சாவின் அச்சுறுத்தல் என்று எல்லாம் உம்மை சூழ்ந்து நின்ற நேரம். உமக்காக கண்ணீர் விட முன்வந்த அந்த உள்ளங்களை நீர் சந்தித்தீர். உமது துயரங்களையும் தாண்டி அவர்களது கண்ணீர் உம் உள்ளத்தை சுட்டது என்பதே உமது இரக்கத்தின் ஆழத்தை எமக்கு உணர்த்துகிறது. நான், எனது துயரம், எனது சூழல் என்று எமது நிலையையே நினைத்து அடுத்தவரின் கண்ணீரையும், துயரத்தையும் கண்டுக்கொள்ளாது வாழ்ந்த நேரங்களுக்காக மனம் வருந்துகிறோம். ''என் விதியை தொலைக்கவே என்னால் முடியவில்லை'' என்று எம்மை நாடி வருவோரின் நிலையை முழுதும் புரிந்துக்கொள்ளாமல் இருந்திருக்கிறோம். அடுத்தவருக்கு நன்மை செய்யா விட்டாலும் மனமறிந்து அவர்கள் துன்பப்பட வேண்டும் என விரும்பியிருக்கிறோம். அதற்கு சில செயல்களிலும் ஈடுபட்டிருக்கிறோம். உம்மைப்போல் துன்பத்திலிருந்தாலும் அடுத்தவருக்கு உதவ முன்வருவோரை தவறாக தீர்ப்பிட்டிருக்கிறோம் ஏளனப்படுத்தியிருக்கிறோம் எம்மை மன்னியும். கண்ணீரோடு தங்கள் வாழ்வை வாழ்ந்துக்கொண்டிருக்கும் அவல மக்களை உம் பதம் சமர்ப்பித்து செபிக்கின்றோம்.

**சிந்தனை:** துயருறுவோர்க்கு ஆறுதல் அளிப்பது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. பசி பட்டினி என பிற கண்டத்தில் வாழ்வோரை கண்டு கண்ணீர் விடுவது பெரிதல்ல, துயரங்களோடு உடன் வாழ்வோரை உற்று நோக்கி உரிய நேரத்தில் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பது இரக்கத்தின் செயல்பாடாகும். அருகிலிருப்பவரின் அழுகையை காணாது, துயரத்தை உணராது, துன்பத்தை புரிந்துக்கொள்ளாது நாம் ஆற்றும் பெரும் பணிகள் எந்த விதத்திலும் பொருள் தராது. நமது துன்பங்களையும் துயரங்களையும் தாண்டி அடுத்தவரின் கண்ணீர் துடைக்கும் வாழ்வுக்கு இந்நிலை நம்மை அழைக்கின்றது. நாம் தயாரா?

## ஒன்பதாம் நிலை: இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, சிலுவை தனது ஆதிக்கத்தை வலுப்படுத்துகிறது. உமது உடலின் வலுவின்மையை தனக்கு சாதகமாக்கிக் கொள்கிறது. எப்படியும் உம்மை வீழ்த்திவிடுவோம் என்ற ஆதங்கத்தில் திளைக்கிறது. இவ்வுலகை எப்படியும் ஆட்கொண்டு விடுவேன் என்று சூளுரைத்து திரியும் பாவத்தையே எங்களுக்கு இது நினைவூட்டுகிறது. இன்று பெறும் தீமை பாவமல்ல, எது பாவம் என்ற சிந்தனையே இல்லாத தன்மையே பெறும் தீமையாக இன்று விளங்குகின்றது. வாழ்க்கை வாழ்வதற்கே அதை எப்படியும் வாழலாம் என்பதே இன்றைய உலகின் போக்காக உள்ளது. எப்படி வாழ்ந்தால் என்ன, என்னை கேட்கப்போவது யார் என்ற மெத்தனப்போக்கு பெருகிவருகிறது. யார் எவ்வழிச்சென்றால் எனக்கென்ன, எனக்கு அதிலே பங்கில்லை என்ற பொறுப்பற்றத்தன்மை இன்று பரவலாகி வருகிறது. இந்த பாவச்சூழலே உமது நன்மைத் தனத்தையும் இரக்கத்தையும் நாங்கள் உணராவண்ணம் எங்களை அடிமைப்படுத்துகிறது. பாவத்தில் சிக்கி திணறும் மக்களை உம் பதம் சமர்ப்பித்து செபிக்கின்றோம்.

**சிந்தனை:** பாவத்திலுள்ளோரை திருத்துவதும் இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. பாவம் என்றால் வெறுக்கவும், பாவிகளை இறைவனின் இரக்கத்திலே அரவணைத்து நல்வழிப்படுத்தவும் நாம் மனப்பக்குவமடைய வேண்டும். இறைவனது இரக்கம் பாவிகளுக்கும் திசையிழந்தோருக்குமே முதலில் தரப்படுகின்றது என்பதை உணர்ந்து தீர்ப்பிடுவதை தவிர்த்து, அன்பிலும் இரக்கத்திலும் தவறிச்செல்வோரை தழுவியணைத்து திருத்த நாம் அழைக்கப்படுகின்றோம். நாம் தயாரா?

## பத்தாம் நிலை: இயேசுவின் ஆடைகள் உரியப்படுகின்றன

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, இதுவரை உமக்களித்த துன்பங்கள் போதாதென்று உமது ஆடைகளை உரித்து உம்மை அவமானப்படுத்துகிறார்கள். இரக்கத்தின் இயலாமையா இது? இரக்கத்தை முன்னிறுத்தும் மக்கள் இறுதிவரை துன்பப்பட்டே ஆகவேண்டும் என்று இவ்வுலகம் மிரட்டுவதாய் தோன்றுகிறது. எனினும் நீர் இங்கு ஆடையிழப்பது உமது மானத்தை இழப்பதற்காக அல்ல. ஆனால் அன்று மனிதக்குலம் இழந்த அழியா வாழ்வை திருப்பித்தரவே என்று உம் முகம் எமக்கு சொல்லிக்கொடுக்கிறது. ஆடையற்றோர், தங்கள் மாண்பிழந்தோர், தமது

பெயரையும் மதிப்பையும் இழந்தோர், தமது வாழ்வில் பொருளிழந்தோர் ஆகியோரை இந்த வேளையிலே எண்ணிப்பார்த்து அவர்களுக்காக செபிக்கின்றோம். உம் சாயலும் உருவும் உள்ளவரை நாங்கள் எதையும் இழந்துவிடவில்லை என்ற உண்மையை எங்களுக்கு உணர்த்தும். எம் வாழ்வும், எம் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வும் உம்மாலும் உமது திருவுளத்தாலும் ஆளப்படுகிறது என்ற உணர்வை இழந்த மக்களை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம்.

**சிந்தனை:** ஆடையற்றோரை உடுத்துவது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. ஆடையிழந்தோர், மனித மாண்பிழந்தோர், மதிப்பிழந்தோர், சமுதாயத்தில் தங்களது நிலையிழந்தோர், இவர்களது வாழ்வு இருண்ட வாழ்வாகவே அமைந்துவிடாது. அவர்கள்மீதும் இறை இரக்கத்தின் பார்வை நிலைக்கொண்டுள்ளது என்பதை நம் வார்த்தையாலும் வாழ்வாலும் மெய்ப்பிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நாம் தயாரா?

## பதினோராம் நிலை: இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, சிலுவைமரத்திலே ஏற்றப்படுகின்றீர். ஏற்கனவே குற்றுயிரும் குலையுயிருமாய் இருந்த உம்மை கழுவேற்றுகின்றனர். உமது உடல் நைந்த நிலை, உள்ளம் துவண்டுவிட துடிக்கும் நிலை. தாகமாயிருக்கிறது என்ற உமது வார்த்தைகள் எவ்வளவு உண்மைகளை எமக்கு எடுத்துச் சொல்லுகின்றன. இறை சித்தம் அறிய நீர் தாகமாயிருந்தீர், உலகின் மீட்புக்காக நீர் தாகமாயிருந்தீர், உண்மையின் வெற்றிக்காக நீர் தாகமாயிருந்தீர். நன்மை நிலைப்பெற, தீமை வீழ்த்தப்பெற, நீர் தாகமாயிருந்தீர். ஆம் இயேசுவே இரக்கத்தின் ஊற்றாகிய நீரே தாகமாயிருந்தீர். இன்னும் தாகமாயிருக்கின்றீர். துன்பங்களிலும் தீமையின் வலைகளிலும் சிக்குண்டு விடுதலைக்காய் ஏங்கும் பலரிலே நீர் இன்றும் தாகமாயிருக்கின்றீர். நன்மையைக் கண்டும் அதை நிலைநாட்ட முடியாது துடிக்கின்றவர்களிலே நீர் இன்றும் தாமகமாயிருக்கின்றீர். தவறுகளை உணர்ந்தும் அதை திருத்த இயலாமல் துடிக்கும் பலரில் நீர் இன்றும் தாகமாயிருக்கின்றீர். தாகத்தோடும், ஏக்கத்தோடும் காத்திருக்கும் உம் எளிய மக்களை உம் பதம் சமர்ப்பித்து செபிக்கின்றோம்.

**சிந்தனை:** தாகமாயுள்ளோருக்கு பருகத்தருவது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. தங்கள் வாழ்விலும், தங்கள் குடும்பத்திலும் வறுமை தீருமா, வழிப்பிறக்குமா, தீர்வுகள் தென்படுமா என்று ஏக்கமாய் உள்ளவர்களை கண்டுணரவும் அவர்களுக்காக நம்மால் முடிந்ததை செய்யவும் நாம் அழைக்கப்படுகிறோம். நீரூற்றுகளையும், நீருக்கான உரிமைகளையும், குடிநீரால் ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாப்பையும், அனைவருக்கும் உரித்தாக்குவதும் இறையிரக்கத்தின், இறையரசின் செயல்பாடுகள் தான். நாம் தயாரா?

## பனிரெண்டாம் நிலை: இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார்

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறை இரக்கத்தின் முகமே இயேசுவே, நீர் எனக்காக, என் மீட்புக்காக உயிர்த்துறந்தீர். நல்லவர் ஒருவருக்காக உயிரைக்கொடுப்பதே அரிதானபோது பாவி எனக்காய் நீர் உயிர்த்துறக்கின்றீர். உம் இரக்கத்தின் அளவற்ற தன்மை எவ்வளவு ஆற்றலோடு வெளிப்படுகின்றது. அத்தனை துன்பங்கள், அத்தனை அவமானங்கள், அடி, உதை, வலி, பாரம், அழுத்தம், இரத்தம் என அனைத்தும் சூழ்ந்திருந்தும் நீர் சொன்ன அந்த வார்த்தைகள் "தந்தையே இவர்களை மன்னியும் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்" இவ்வார்த்தைகள் என் உள்ளத்தை தைக்கின்றன. எனக்கெதிராக ஒருசிறு தீமை செய்தாலும் அவர்களுக்கெதிராக முறையிடுபவன் நான். மன்னித்தாலும் மன்னிப்பேன் ஆனால் மறக்க மாட்டேன். அவர்களோடு நான் பேசமாட்டேன். அவர்கள் இருக்கும் பக்கமே போகமாட்டேன் என்றெல்லாம் முடிவெடுக்கும் எனக்கு உமது இந்நிலை பெரும் பாடமாய் இருக்கிறது. எத்தனை முறை அடுத்தவருடைய அழிவை நான் ரசித்திருப்பேன். எத்தனை முறை உம்மிடம் நான் முறையிட்டிருப்பேன், பழிவாங்க துடித்திருப்பேன், உம்மிடமே குறைக்கண்டிருப்பேன் என்னை மன்னியும். மன்னியாத மனத்தோடு உடைந்த உறவுகளோடு பகையுணர்வோடு வாழும் ஒவ்வொரு சகோதரனையும் சகோதரியையும் உம் பதம் சமர்ப்பித்து செபிக்கின்றேன்.

**சிந்தனை:** பாங்களை மன்னிப்பது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிருத்தப்படுகிறது. எனக்கெதிராய் தீமை செய்தாலும் அதை நான் மன்னிப்பதே இரக்கத்தின் வழி. எத்தனை முறை பாவம் செய்தாலும் அதை மன்னிக்க தயாராய் இருப்பதே

இரக்கத்தின் வழி. என்னை அழித்துவிட எண்ணுவோரையும் அன்போடு கண்டு மன்னிப்பதே இரக்கத்தின் வழி. நாம் தயாரா?

## பதிமூன்றாம் நிலை: இயேசுவின் உடல் மரியின் மடியில் கிடத்தப்படுகிறது

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறைஇரக்கத்தின் முகமே இயேசுவே, குழந்தையாய் உம்மை தாங்கிய மடி இன்று கொலையான உடலாய் உம்மை தாங்குகின்றது. உம் இரக்கத்தின் சாயல் உம் அன்னையிலும் இருப்பது எமக்கு வியப்பே அல்ல. கதறி அழும் போதும் இரக்கம் குலையாமல் இறைவனின் சித்தம் என்னவாய் இருக்கும் என்று சிந்தித்தாள் அந்த அன்னை. உயிரோடு உம்மை சீராட்டிய அந்த கரங்கள் நீர் இறந்தும் உம்மை வருடுகின்றன. உயிரோடு உம்மை பார்த்து இரசித்த அந்த கண்கள் நீர் இறந்தும் கண்ணீரோடு உம்மை உள்வாங்குகின்றன. உயிரோடிருப்பதும் இறந்து கிடப்பதும் பெறும் மாற்றங்களல்ல. ஆனால் இவ்விரு நிலையிலும் இறைவனின் சித்தத்தை நாடுவதே நம் கிறிஸ்தவ அழைப்பு என்று எமக்கு எடுத்துச்சொல்லுகிறார் அன்னை மரியாள். நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காக, நான் இறந்தால் அது ஆதாயமே என்ற பவுலடிகளாரின் கூற்றே இங்கு எம்பி நிற்கின்றது. வாழ்வுக்கும் சாவுக்குமிடையே போராடிக்கொண்டிருக்கும் மக்களையும், இறப்பினால் ஏற்பட்ட இழப்புக்களை தாளாது தவிக்கும் உள்ளங்களையும், வாழ்வதா சாவதா என்று குழம்பி நிற்கும் உம் பிள்ளைகளையும் உம் பதம் சமர்ப்பித்து செபிக்கின்றோம்.

**சிந்தனை:** வாழ்வோருக்காகவும் இறந்தோருக்காகவும் செபிப்பது இரக்கத்தின் செயல்பாடென முன்னிறுத்தப்படுகிறது. வாழ்வோர் இறைவனிலே வாழவும், இறை மதிப்பீடுகளிலே ஊன்றி வளரவும், இறையரசை நிலைநாட்டவும் இறந்தோர் இறைவனிலே சரணடையவும் அவர்களது குற்றம் குறைகள் களையப்பட்டு இரக்கம் பெறவும் செபிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். செபிக்கும் மக்களாய் நாம் வாழவும் நமக்காக மட்டுமன்றி வாழ்வோர் அனைவருக்காகவும் இறந்தோருக்காகவும் நாம் செபிக்கவும் அழைக்கப்படுகிறோம். நாம் தயாரா?

## பதினான்காம் நிலை: இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்படுகிறது

**திவ்விய இயேசுவே...**

**செபம்:** இறைஇரக்கத்தின் முகமே இயேசுவே, கல்லறை உமதுடலை பெற்றுக்கொள்கிறது. அனைத்தும் முடிந்துவிட்டது போன்றதொரு உணர்வு. ஆனால் பொதியப்படும் உமது உடல் மீண்டும் உயிர்த்தெழும்போது உமது இரக்கத்தின் முழு வல்லமை இவ்வுலகிற்கு வெளிப்படும். இறப்பு என்பது முடிவல்ல தோல்வி என்பது இழப்பல்ல, வீழ்தல் என்பது நிலையல்ல என்று நாங்கள் உணராத நேரங்களுக்காக மனம் வருந்துகிறோம். தோல்விகளையும், இழப்புகளையும், ஒரு சில வீழ்ச்சிகளையும், ஏன் மரணத்தையும் கூட மாண்போடு, உயர்ந்த எண்ணங்களோடு, இறையுணர்வோடு, நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எம்மில் இல்லாத நிலைக்காக மனம் வருந்துகிறோம். எந்நிலையிலும் உம் இரக்கம் அழிந்துவிடாது, எதுவும் உம் இரக்கத்தை மேற்கொள்ளாது என்னும் உண்மைகளை நாங்கள் புரிந்துக்கொள்ளச் செய்யும். தங்கள் வாழ்வையே பணயம் வைத்து மக்கள் பணியாற்றும் பலதரப்பினரை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். படைவீரர்கள், காவல்துறையினர், சமூக ஆர்வலர்கள், நீதிக்கும் நேர்மைக்கும் குரல் கொடுப்பவர்கள் என அனைவரையும் எண்ணிப்பார்த்து அவர்களுக்காக இவ்வேளையில் செபிக்கின்றோம்.

**சிந்தனை:** இறந்தோரை நல்லடக்கம் செய்வது இரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுகிறது. இறப்பின் மேன்மையையும் அதன் உட்பொருளையும் உணர்ந்தவர்களாய் இறந்தோருக்குரிய மதிப்பை தருபவர்களாய், இறப்பை கண்டு அஞ்சாமல் அதன் உண்மை இயல்பை உணர்ந்தவர்களாய் நம்பிக்கையோடு வாழ நாம் அழைக்கப்படுகின்றோம். கல்லறைகளுக்காக சச்சரவு, உயிரை மதிக்காத நிலை, கொலை, கொள்ளை, தற்கொலை, கருச்சிதைவு, சிசுக்கொலை அகியவற்றை எதிர்த்து வாழ நாம் அழைக்கப்படுகின்றோம். நாம் தயாரா?

## 2. வாழ்வின் பாதை இதுவே

**திருமதி. ஆரோக்கியமேரி**

**முன்னுரை:** அன்றாட வாழ்வில் அவலங்களோடும், புலரும் புதுப்புது நம்பிக்கைகளோடும் வழக்கம்போல் இயேசுவின் சிலுவையினை தூசி தட்டி துடைத்து சுமந்துச் செல்ல இருக்கும் இவ்வேளையில் சிலுவையில் தெரியும் ஒளி என்ன? வழி என்ன? வாழ்வு என்ன? என சிந்திக்க அழைக்கப்படுகிறோம். அன்பு கொண்டதால் ஓர் ஆலமரம் சாய்க்கப்பட்டது என்போமா, புரட்சியை விதைத்து விடியல் தேடும் மனிதர்களை உருவாக்கியதால், ஒரு சூரியன் மேகங்களால் சிறைபிடிக்கப்பட்டது என்போமா? மானுட வாழ்வின் மனித நேயத்தை முளைவிடச் செய்ததால், ஒரு முழுமனித தெய்வம் முட்டி சாய்க்கப்பட்டது என்போமா? எப்படிச் சொன்னாலும் சிலுவை காட்டும் உண்மையை, அன்புக்கு சரியான அங்கீகாரம் கிடைக்காமையை, நம்பிக்கை துரோகத்தை, நயவஞ்சகத்தை, நீதிக்கு கிடைத்த அநீதியை எவராலும் மறுக்க முடியாது. உரிமைக்காக போராடுபவா்களின் குரல்வளையை நெரித்துப் போட்டாலும், போராட்டத்தை சமாதியாக்க முடியாது என்பதை சிலுவையின் நிழலில் தெரிந்து கொள்ள முடிகிறது. வாழ்வின் வழியில் மீண்டும் மீண்டும் முட்களும், கற்களும், நச்சுப்பூச்சிகளும், விஷமுடைய மானிடப் பதா்களும் நிறைந்திருக்கும் என்பது எதாா்த்தமான நிதா்சமான உண்மை. இதில் நாமும் ஓா் அங்கத்தினா்கள்தான். உண்மை கசப்பானதுதான் ஆனால் உண்மையின் வழியேதான் வாழ்வு. வாழ்வின் வழியில் தொடா்ந்து பயணிக்க நம் மனதை தயாா்படுத்துவோம். ஏனென்றால் வாழ்வின் வழி இதுவே.

### முதல் நிலை: திசை மாறிய தீா்ப்பு:

**திவ்ய இயேசுவே**… உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறோம்.

**சிந்திக்க:** திசை மாறிய தீா்ப்புகளை திருத்தி எழுதியதற்காய் சாவின் உச்சத்திற்கு தள்ளிவிடப்படுகிறாா். உண்மையை உரக்கச் சொன்னதால் குரல்வளை நெரிக்கப்படுகிறாா். அநீதியை அதட்டிக் கேட்டதற்காய் அகால மரணமடைய தீா்ப்பிடப்படுகிறாா். தனக்கெதிராய் தீா்ப்பு இப்படியிருக்குமென்று தெரிந்தும் தீா்க்கமான முடிவோடுதான் இயேசு வாய் பேசாது, வழக்காடாது இருந்தாா். உண்மை பிழைத்துக்கொள்ளும், தான் ஊமையாக இருப்பதால் ஒன்றும் பிரச்சனையில்லை என நினைக்கிறாா். முதல் முறையாக இயேசு தனக்கு அநீதி இழைக்கப்படுவதை அனுமதிக்கிறாா். அடுத்தவருக்காக ஆா்த்தெழுந்தவா், தனக்காக மௌன யுத்தம் நடத்துகிறாா். குறையொன்றும் செய்யாத கோமகனை குற்றவாளியாக்குகிறாா்கள். அதிகாரமும், ஆட்சியமைப்பும், நீதிக்கும் நியாயத்துக்கும் வாய்ப்பூட்டு போடுவதில் மும்முரமாக இருக்கின்றன. பணத்தின் முன் நீதியும் பட்டினி கிடக்கிறது. அதிகாரத்தை தக்க வைப்பதற்காக அன்றொரு முறை நீதி சாகடிக்கப்பட்டது அதே காரணத்திற்காக இன்றும் நீதி ஓராயிரம் முறை சாகிறது.

**செபம்:** சாட்சியில்லை என பலமுறையும் சாட்சியிருக்கிறது என சிலமுறையும் நாம் நீதியை கொன்றிருக்கிறோம். பணம் கைமாறினால் பதவி உயா்கிறது, பதவி உயா்ந்தால் நீதியும் விலை போகிறது. ஊழல் மயமான இவ்வுலகில் ‘இவா் செத்துவிட்டாா்’ என சான்றிதழ் கொடுப்பதற்கும் கூட சாக்கடை உலகம் சன்மானம் கேட்கிறது. நீதியை நிலைப்படுத்தாது இவ்வுலகில் எதுவுமே சாத்தியமில்லை என உணா்வோம். நீதிக்காக நாம் ஏங்கும் வேளையில் எளியோருக்கும் வறுமையில் வாடுவோா்க்கும் நாம் நியாயமான தீா்ப்புகளை வழங்கியிருக்கிறோமா என சிந்திப்போம். கருணை இறைவா! கடந்தவையெல்லாம் நல்லவை அல்ல, நடப்பவையாவது நல்லவையாக இருக்கட்டும் என ஏங்குகிறோம். ஆனால் அப்படிப்பட்ட நாங்களே பல நேரங்களில் நியாயமான தீா்ப்பு வழங்காமல் நீதிக்கு சவக்குழி தோண்டியிருக்கிறோம். எம் குறை நீக்க உம் வழி நடத்தும். மற்றவா்களுக்கு நாங்கள் தீா்ப்பிடாமலிருந்து உம் தீா்ப்பு வழி நடக்கும் வரம் தாரும். ஆமென்.

எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி எங்கள்மேல் இரக்கமாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றி அடைவாா்களாக. ஆமென்.

**பாடல்:**

### 2. இரண்டாம் நிலை: சுமையொன்று சுகமானது

**திவ்ய இயேசுவே**…

**சிந்திக்க:** இயேசுவின் தோளில் நீங்காத இடம் பிடிக்கிறது பாரச்சிலுவை. ஆம், இயேசுவின் வாழ்வில் நினைவு கூறத்தக்க விதத்தில் அமைவது அவரது இறுதிப் பயணம். இதற்காகவே பிறந்தாா். இதற்காகவே வாழ்ந்தாா். இதற்காகவே

இறக்கப்போகிறார். இறப்பதற்காகவே பிறந்த மாமனிதன் இயேசு. துயரங்களே துய்க்க இருக்கும் மனமகிழ்வின் திறவுகோல் என்பதனை நம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆனால் இயேசு சிலுவையை சுகமாக ஏற்றுக்கொள்கிறார். எதிரியை வரவேற்கும் உயரிய சான்றோனைப் போன்று தனது போராட்டத்திற்கான ஆயுதத்தை இயேசு ஏந்திக் கொள்கிறார். சுமையை சுகமென்று சொன்ன அதே ஆண்டவர் இன்று சிலுவை சுமக்கிறார். துயரங்களின் வழி வாழ்வு என உறுதி செய்கிறார். இதன்மூலம் இயேசு மனந்தளர்ந்து விடவில்லை. அவலங்களைத் தாண்டி அதனை வெல்ல வேண்டும் என்கிறார்.

**செபம்:** கஷ்டம் வரும் வேளையில் கடவுளை நாம் கடிந்துக்கொள்ளக் கூடாது. துயரம் வரும்போது பிறரை தூற்றாமை வேண்டும். நன்மையும் தீமையும் நாம் செய்ய வருவதே என்று உணர்தல் வேண்டும். சின்னச் சின்ன உரசல்களில்தான் வாழ்வின் சிறப்பு இருக்கிறது என்னும் சிந்தனை நமக்கு வேண்டும். கள்ளமில்லா மனம் கொடு இறைவா! கஷ்டம் அறியும் அறிவு கொடு, கனிந்த அன்பு செய்யும் குணத்தைக் கொடு. தாராள திறந்த மனதைக்கொடு. கனிவான சுமைகள் தருவாயா இறைவா.

## மூன்றாம் நிலை: முதல் முத்தம்

**திவ்ய இயேசுவே**...

**சிந்திக்க:** இரவுக்கு பகல் கொடுக்கும் முத்தம் விடியல். மேகம் பூமிக்கு கொடுக்கும் முதல் முத்தம் மழைத்துளி. விதை விழுந்தாலும் முளைத்தே எழுகிறது. இலைகள் உதிர்ந்தாலும் மடிந்து உணவாய் மாறுகிறது, மாற்றிக்கொள்கிறது. சாம்பல் மேடுகளில்தான் வாழ்வின் வாய்ப்பாடு மறைந்துள்ளது. சுமை அழுத்த முதல் முறையாய் இயேசு மண்ணை முத்தமிடுகிறார். இன்று இந்த நிலம்தான் எத்தனை அழிவுக்குள்ளாகிறது என யோசிக்கிறார் போலும். சுமைகளை தாங்கும்போது தடங்கல்கள் வரும். தவறி விழலாம். இலக்கு இருந்தால் முயற்சிக்கு விலக்கு இல்லை. இயேசுவுக்கு இலக்கு இருந்தது. எனவேதான் தளராது முன்னேற தடுமாறி விழுந்தாலும் எழுந்து நடக்கிறார். ஆனால் நமது அன்றாட வாழ்வில் முதல் கோணலே முற்றும் கோணலாகிறது.

**செபம்:** முதல் கோணலே முற்றும் கோணல் எனச்சொல்லி முயற்சிக்கு முட்டுக்கட்டை இடாதிருக்க வேண்டும். முயற்சி மெய்வருத்த கூலிதரும் என உணர வேண்டும். தவறுகளைத் தாண்டி தனித்துவம் காண சிந்திக்க வேண்டும். இலையுதிர் காலத்தில் வந்த வசந்த காலமே இறைவா! சம்பிரதாயங்களையும் பழக்க வழக்கங்களையும் சொல்லி புதிய முயற்சிகளும், சமூக மாற்றங்களும் மழுங்கிட இடம் தராமல் எண்ணங்களிலும் சிந்தனையிலும் பழமையில் ஊறி கிடக்கிறோம். எம்மில் புதுமையை புகுத்த வரம் தாரும். ஆமென்.

## நான்காம் நிலை: பாசத்தின் பரிமாற்றம்

**திவ்ய இயேசுவே**...

**சிந்திக்க:** இயேசு தனது வாழ்வின் பயணத்தில் தன்னை பத்து மாதம் சுமந்த தாயை சந்திக்கிறார். தாயின் கண்ணீரில் தனயனின் இலட்சியம் கரையவில்லை. மாறாக வலுப்பெறுகிறது. ஒரு வீரத் தாயால் மட்டுமே தன்னுடைய மகன் இப்படிப் பாடுகளில் பயணப்படும்போது பிரியாவிடை கொடுக்க முடியும். தன் உதிரமும், உடலும் இவ்வுலகின் மீட்புக்கு உணவாகிறது என்னும் பெருமித உணர்வில் மகனின் உள்ளம் மகிழ்வைதை தாய் உணர்கிறாள். தொடர்ந்து செல்ல ஊக்கமளித்து அந்த விவேகமான வீரத்தாய் உடனிருக்கிறாள். அன்னையின் வளர்ப்புதான் அவனிக்கு விளக்காகவோ அல்லது இருளாகவோ மாறுகிறது. குழந்தைகளெல்லாம் அம்மை, அப்பனை தோலுரித்துக் காட்டும் உண்மை சாட்சிகள். அன்னையரே வாழ்வின் சிற்பிகள்.

**செபம்:** சராசரித் தாயாக சராசரி குழந்தையை வளர்ப்பதில் இல்லை வாழ்க்கையின் இரகசியம். குப்பையில் முளைத்தாலும் வானத்தை எட்டிப்பிடிக்க முயலும் தாவரமாக வேண்டும். தீவிரவாதியும் உலகம் போற்றும் சாதனையாளனும், நன்மையில் வளரும் பொது உடமைவாதியும், தவறுகளைத் தட்டிக் கேட்கும் புரட்சிக்காரனும் ஒரு தாயின் வளர்ப்பில்தான் என்பதை புரிதல் வேண்டும். உதவி செய்யாவிட்டாலும் இலட்சியங்களை உதறித் தள்ளாத தாயாக தந்தையாக சகோதரர்களாக சகோதரிகளாக மாற எங்கள் அனைவருக்கும் நல்ல உள்ளத்தை தாரும் இறைவா. அதிர்வுகளைத் தாங்கும் கடலாக அனைத்தையும் ஏற்றுக்கொண்டு வாழும் தைரியத்தையும், மனவுறுதியையும் தந்தருளும் ஆமென்.

## ஐந்தாம் நிலை: உதவிக்கரம் உருவாகிறது

**திவ்ய இயேசுவே…**

**சிந்திக்க:** பாரச்சிலுவை கைமாறுகிறது உதவிக்கரம் உருவாகிறது. வன்முறை உலகிலும் சில நன்முறைச் செயல்களை செயல்படுத்தும் சான்றோர்கள் இருக்கிறார்கள் என்னும் நம்பிக்கை ஒளி வீசுகிறது. நம் மீட்புக்காக நாமே நம் சிலுவையை சுமக்க வேண்டும். அப்படி சுமக்கையில் அடுத்தவரின் மீட்புக்கும் உதவுகிறோம் என்னும் உயரிய நெறியை வெளிப்படுத்துகிறது சீமோனின் சீரிய செயல். இயேசு நமது மீட்புக்காக சிலுவை சுமந்தாலும் அவரோடு நாமும் ஒத்துழைக்க வேண்டும். ஒரு கை தட்டுவதால் ஓசையில்லை. இருகரங்களாலும் இன்னிசை வரும் இணைவினிலே. அப்போதுதான் வளர்ச்சி, மலர்ச்சி, மறுமலர்ச்சி என எல்லாமே சாத்தயப்படும். கூட்டுச் செயல்பாடே இன்றையத் தேவை. ஆகவே நாமும் கூடி வாழவும், ஒற்றுமையோடும் சமாதானத்தோடும் வாழும்போது அங்கு உதவிக்கரங்கள் அதிகரித்து விட்டன என அறிந்து கொள்ளலாம்.

**செபம்:** தனித்தனி தீவுகளாக வாழும் கயமை ஒழிந்து மற்றவரின் தேவையில் தாங்கிக் கொள்ளும் கனிவு வேண்டும். சமூக தன்மையே சமத்துவ சமூகத்திற்கு ஊற்று என உணர்தல் வேண்டும். ஒற்றுமையே வலிமை, உதவும் பண்பே உறவு. அன்புக்காக அனைத்தையும் இழந்தவரே சொந்த பந்தங்களுக்காக அல்ல, மாறாக முன்பின் தெரியாத யாரோ ஒருவருக்காக நாங்கள் சிலுவை சுமக்க அவருடைய துன்பங்களில் பங்கெடுக்க, பகிர்ந்து கொள்ள வரமருளும் இறைவா.

## ஆறாம் நிலை: பாலைவனத்தில் ஒரு பனித்துளி

**திவ்ய இயேசுவே…**

**சிந்திக்க:** வறண்ட பூமிக்கு வான்மழை, வாடிய பயிருக்கு தண்ணீர்த் துளி… பசித்த வயிறுக்கு ஒரு பிடி சோறு. வெந்துபோன மனதுக்கு ஆறுதலாக ஒரு வார்த்தை. தனித்து விடப்பட்டவருக்கு தாங்கிக் கொள்ள நீளும் கை. அமாவாசை இருட்டுக்கு மின்மினி… இவையெல்லாம் அதிசயங்கள் அற்புதங்கள். தவத்திற்கு கிடைத்த வரங்கள். வாடிய இயேசுவின் முகம் மலர்ச்சிக்குள் நுழைகிறது வெரோணிக்காவினால். வெரோணிக்காவுக்கு வெகுமதி. ஆம் துணியில் இயேசுவின் முகம் பதிகிறது. அன்புச் செயலுக்கு பரிசு. அவள் ஒரு புரட்சிப்பெண். தடைகளைத் தாண்டி அன்பைக் கொடுத்த புதுமைப்பெண். அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்ட சமூகத்தில் வெரோணிக்காவின் செயல், அமுங்கிக் கிடக்கும் மனித நேயத்தை முதுகு நிமிரச் செய்தது. மடிந்துபோன மானுட மதிப்பீடுகளை உயிர்பெறச் செய்தது.

**செபம்:** மனிதர்களால் ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட மனிதரில் சிலுவை சுமக்கும் இயேசுவை காண வேண்டும். செருப்புத் ததைக்கும் தோழரில், குப்பை அள்ளும் நண்பரில், வீதியோர நண்பரில், செல்லும் வழிப்போக்கரான சகோதரரில் இயேசுவை காணுதல் வேண்டும். மனிதனாக வாழும் மனம் வேண்டும். இறைவா! கண்ணீரைக் கண்டால் கசிந்து உருகும் மனம் தாரும். வாழ்விழந்த மனிதருக்கு வாழ்வின் நம்பிக்கை கீற்றாகும் வரம் தா. முழு மனிதனாக வாழும் உள்ளமும் உயிரும் தந்து ஆசீர்வதித்தருளும். ஆமென்.

## ஏழாம் நிலை: இன்னுமொரு முறை இடறல்

**திவ்ய இயேசுவே…**

**விளக்கம்:** மனித உணர்வுகளுக்கு உரிய இடம் கொடுப்பது அவசியம். இரக்கமோ, பரிவோ, பாசமோ, மகிழ்ச்சியோ, துன்பமோ, சோதனையோ சோர்வோ இனை அத்தனைக்கும் உரிய மதிப்புத் தரப்பட வேண்டும். இறைமகனான இயேசுவும் மனிதனாக இருந்த காரணத்தால் மனிதர்படும் அத்தனை வேதனைகளையும் அனுபவித்தார். அதனால் சோர்வில் பாரச்சிலுவையோடு இரண்டாம் முறையாய் விழுகிறார். பாரத்தின் சுமை தாங்க முடியாமல் தள்ளாடி தடுமாறி விழுகிறார். இன்றைய சமுதாயம் எதார்த்த நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ளாது போலி முகமூடிகளோடு சமரசம் செய்து கொள்வரே இயேசு என்றும் ஏற்றுக்கொள்ளமாட்டார். தவறுகளை தவிர்ப்பதற்கு எத்தனை முறை விழுந்தாலும் பரவாயில்லை. ஆனால் தவறு மட்டும் நிகழக்கூடாது.

**சிந்தனை**: போலி முகத்தோடு இளைய சமுதாயத்தை ஏமாற்றும் நடிக, நடிகையர்கள் பின் அலைவதை எண்ணிப் பார்க்க வேண்டும். வளர்ச்சிப் பணிகளில் தளர்ச்சி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் தவறுவதை தவிர்க்க வேண்டும் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும்.

**செபம்:** மனிதருள் தெய்வமே! எம் அயலாரின் உணர்வுகளை மதித்து அவர்களை அன்பு செய்யும் வரம் தாரும். பொய்மைகளை இனம் கண்டு மெய்மைகளுக்கு உயிர் கொடுக்க போதுமான மன வலிமையும், சக்தியையும் தந்து ஆசீர்வதித்தருளும்.

**எட்டாம் நிலை: எருசலேம் மகளிரின் ஏக்கம்**

**திவ்ய இயேசுவே**…

**விளக்கம்:** கண்ணீர் துளிகள் பல நேரங்களில் காலை வாரி விடுபவைகளாக இருக்கின்றன. ஆனால் எருசலேம் மகளிரின் கண்ணீர்த்துளிகள் இயேசுவின்மீதுள்ள அன்பை வெளிப்படுத்துகின்றன. தங்களது கையாலாகாத்தனத்தை நினைத்து வருந்துகிறார்கள். மற்றவர்களுக்காக இரங்கும் மனது, அநீதி புரியும் மக்களை நினைத்து மனம் குமுறுவது தெரிகிறது. இறைமகன் இயேசுவோ அவர்களது பரிவை ஏற்றுக்கொள்கிறார். அந்தப் பரிவை தங்களைச் சார்ந்திருக்கும் மனிதருக்குக் காட்டச் சொல்கிறார். அநீதி என்று தெரிந்தும் அந்த கொடுமைக்கு துணைபோகும் தங்களது குடும்பத்தாரை நினைத்து அழச் சொல்கிறார். தங்களுக்கும் இப்படி கொடுமை நிகழலாம் என நினைக்க அழைக்கிறார்.

**சிந்தனை:** இரங்கும் குணம் வேண்டும், அநீதியை அழிக்கும் குணம் வேண்டும். நீதிக்கு குரல் கொடுக்கும் குணம் வேண்டும். அன்பை தேடுவோர்க்கு அரவணைக்கும் குணம் வேண்டும். பகிர்ந்து வாழும் குணம் வேண்டும். கூடி வாழும் குணம் வேண்டும்.

**செபம்:** எங்களின் பகைவர்களை மன்னிக்கும் மனதைத் தந்து அவர்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனபக்குவத்தைத் தாரும் இறைவா! எவ்வுயிர்களுக்கும் தீங்கிழைக்காது கருணையோடு நோக்கும் குணம் அளித்து நல்வழிநடத்தும் இறைவா.

**ஒன்பதாம் நிலை: முழுமையாக்க மூன்றாம் முறையும்**

**திவ்ய இயேசுவே**…

**விளக்கம்:** பட்ட காலிலே படும், சுட்ட இடத்திலே சுடும் என்பார்கள். இயேசுவின் நிலையும் இப்படித்தான். கொல்கொத்தா எருசலேமிலிருந்து ஒதுக்குப்புறமாக நகரைவிட்டு வெளியில் இருப்பதால் நீண்ட தூரம் பயணம் செல்ல வேண்டும். அதுவும் அதிக பாரமான சிலுவையை சுமந்து சென்றால் சொல்ல வேண்டியதில்லை. பலம் குறைந்தவராய் பாரச்சிலுவை பலமாக அழுத்த இயேசு மூன்றாம் முறையாய் கீழே விழுகிறார். முகத்தில் வழியும் இரத்தத் துளிகளோடு, எலும்புகள் எல்லாம் வலு குறைய, முகம் மண்ணில் தேய சிராய்ப்புகளோடு இயேசு கீழே விழுந்து கிடக்கிறார். கண்ணீர்த்துளி எட்டிப் பார்க்கிறது. படைவீரர்களின் வசை பாடலினூடே இயேசு எழுந்து தன் பயணத்தைத் தொடர்கிறார்.

**சிந்தனை:** உடலில் வலு குறைந்தாலும் உள்ளத்தில் உறுதி வேண்டும். பிறர்நலமே தனது நலமாக கொள்ளும் புத்துணர்வு வேண்டும்.

**செபம்:** மனச்சோர்வுகள் எங்களை தாக்கும்போது மனநிறைவோடு ஏற்றுக்கொள்ளும் மனம் தா இறைவா! மீண்டும் சாதிக்கும் உரம் தா இறைவா! உன்னோடிருக்கும் உறவை நாங்கள் மறந்துவிடாமல் இருக்க நல்ல எண்ணத்தையும், சிந்தனையையும் தந்தருளும் இறைவா.

### பத்தாம் நிலை: ஆடைகள் அவிழ்க்கப்படுகிறது

**திவ்ய இயேசுவே...**

**விளக்கம்:** இயேசு இலக்கை அடைந்துவிட்டார். அவருக்கான பலிபீடம் தயாராகி விட்டது. பலிபொருள், பலியிடுபவர் எல்லாம் அவரே. சிலுவையிலே மரிக்கவிருக்கும் இயேசுவின் உடைகள் உரியப்படுகின்றன. உடலில் உறைந்திருந்த இரத்த வடுக்கள் உடைந்து மீண்டும் இரத்தம் பெருக்கெடுக்கிறது. தாங்க முடியாத வேதனை. ஆனால் மௌனமே சாதனை. மனிதனின் மானத்துக்கு அடையாளம் ஆடை. மனிதா் மரித்ததுக்கு அடையாளம் ஆடையில்லாமை. பிறந்தபோது வந்த மாதிரி இறந்த போதும் இருக்கிறார் இயேசு. அவருக்காக குரல் கொடுப்பார் இல்லை. அவருக்காக அதிகாரிகளிடம் பரிந்து பேசுவார் இல்லை. 'மெசியா இறைமகன்' என்று வாய் இனிக்க பேசிய கூட்டம் இன்றோ வாய் திறக்கவில்லை.

**சிந்தனை:** சிந்தனையில்லாதவரிடமும் சீராக பழகும் மனம் வேண்டும். கருணை இல்லாதவரிடமும் கனிவு காட்டும் மனம் வேண்டும். ஆனால் உரிமை மீறலுக்கு எதிராய் உரக்க குரல் கொடுக்க வேண்டும்.

**செபம்:** நன்மை பெருகட்டும் இறைவா! எல்லோரும் எல்லாம் பெறட்டும் இறைவா! மெலியோரை வலியோர் மதிக்கும் மனம் தா இறைவா.

### பதினொன்றாம் நிலை: சிலுவையில் சிரச்சேதம்

**திவ்ய இயேசுவே...**

**விளக்கம்:** மனிதம் பேசிய புனிதம் மடிந்துவிட சிலுவை ஏறுகிறது. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள். ஆணி கொண்டு அங்கங்களை பிளக்கிறார்கள். சாட்டையாள் கிழித்தது போதாதென்று எஞ்சிய பாகங்களை சிலுவையில் ஆணியால் கிழிக்கிறார்கள். இயேசு வெறித்து பார்த்தபடி இருக்கிறார். நடப்பது கனவுமில்லை. கற்பனையுமில்லை கண்முன்னே ஓர் அக்கிரமம் அரங்கேறுகிறது. வலியின் கொடுமையால் விம்மி அழும் இயேசுவினது உள்ளத்தின் குரல் எல்லோராலும் உணரப்படுகிறது. என்ன செய்வது? கட்டளைகளும் சம்பிரதாயங்களும் பல நேரங்களில் உயிரை எடுப்பதில் தான் நிறைவேற்றப்படுகின்றன. இயேசு ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்யப்படுகிறார். தன்னை பலியாக ஒப்புக் கொடுக்கும் அதே இயேசு அதிகார வர்க்கங்களின் பார்வையில் சிலுவை ஒரு கொலைக் கருவி, ஆனால் நமக்கு அது வெற்றியின் கருவி.

**சிந்தனை:** அடங்காமை வேண்டும் அழிவுக்கெதிராய் ஆர்த்தெழ வேண்டும். அன்புக்கு ஆதரவு வேண்டும் அன்பே அனைத்துமாக வேண்டும்.

**செபம்:** சட்டங்களை தாண்டும் மனம் தா. மனிதனாய் வாழும் நிலை தா மற்றவரையும் மனிதனாகப் பார்க்கும் மனம் தா இறைவா.

**பனிரெண்டாம் நிலை: எல்லாம் நிறைவேறியது**

**திவ்ய இயேசுவே...**

**விளக்கம்:** இறப்புதான் ஒரு மனிதனின் பிறப்பை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்துகிறது. இறப்புதான் ஒரு மனிதன் வாழ்ந்ததற்கான அடையாளம். முகம் தெரியாத மனிதனுக்காக இயேசு தன்னையே முழுமையாக ஒப்படைத்தார். கள்வராய் வாழ்ந்த மனிதருக்காக கள்வர்கள் நடுவிலே ஒரு கறை படியாத மனிதனாக தொங்குகிறார். இந்த சமூகம் சின்னச் சின்னதாய் செய்த துரோகங்களுக்காக ஒரே முறையாய் உயிர் துறக்கிறார். ஆம் வாழ்வின் ஒளி இங்கிருந்துதான் புறப்படுகிறது. மரணமே உயிர்ப்பு. உயிர்ப்பே வாழ்வு. இயேசு இறக்கிறார் தன்னை தரணிக்கு கையளித்த இறைவனுக்கு தன்னையே கையளிக்கிறார் இயேசு. படைவீரர்கள் ஏளனம் செய்ய, அதிகார வர்க்கங்கள் கொக்கரிக்க இயேசு மௌனமே பதிலாக ஆர்ப்பாட்டமின்றி, “எல்லாம் நிறைவேறிற்று” என தனது இலட்சியம் நிறைவேறியதை சுட்டிக் காட்டி விடைபெறுகிறார்.

**சிந்தனை:** இழக்க வேண்டும். இழப்பதில் சுகம் வேண்டும். ஒடுக்கப்பட்டவர்களுக்காக தாழ்த்தப்பட்டவர்களுக்காக தன்னை அழிக்கும் எண்ணம் வேண்டும். இறந்தும் வாழும் நிலை வேண்டும்.

**செபம்:** உறவுக்காக உயிரைக் கொடுத்தவரே உன் வழி வாழும் வரம் தா. கல் நெஞ்சத்தையும் கரைய வைக்கும் கனிவான செயல்கள் செய்ய நல்ல மனதைத் தா இறைவா.

**பதிமூன்றாம் நிலை: தாயின் மடியில் சேயின் சடலம்**

**திவ்ய இயேசுவே...**

**விளக்கம்:** உண்மை எல்லா நேரங்களிலும் ஏற்றுக் கொள்ள கடினமானதாக இருக்கிறது. தாய்க்கும் மகன்தான் எல்லா காரியங்களையும் உடனிருந்து நிறைவேற்ற வேண்டும். தாய்க்கு இவ்வுலகில் இருக்கும் ஒரே சொந்தம் மகன்தான். கணவனை இழந்த சோகத்தை மாற்றுவது பச்சைக் குழந்தையின் பாசச் சிரிப்பும், இளமைத் துள்ளலுடன் கூடிய விளையாட்டும்தான். தன்னை தாங்க வேண்டிய மகனை தான் தாங்க நேர்ந்த அவலத்தை என்னவென்று சொல்வது? அன்னை மரியின் ஆதங்கம் இதுதான். அவருக்கிருந்த ஒரே சொந்தத்தையும் கொல்லும் சதியை யார் செய்தது, அவரது கண்ணீரில் நம் பாவங்களை கழுவ நேர்ந்த அவலத்தை என்னவென்று சொல்வது, ஒரு பாவத்தை மறைக்க இன்னொரு பாவமா? தாலாட்டின கைகள் ஒப்பாரிக்காக தயாராகின்றன.

**சிந்தனை:** பொதுநலனுக்காக தன்னலங்களைத் துறக்க வேண்டும். சுய இலாபங்களைத் தேடாது வாழ வேண்டும். தன்னையே இழக்க தயாராக வேண்டும். பொறுமையாக இருக்கும் வரம் தா. சிறுமை கண்டு பொங்கியெழும் மனம் தா. கடமை தவறாமல் போராடும் குணம் தா இறைவா.

**பதிநான்காம் நிலை: அடக்கம் தொடக்கம்**

**திவ்ய இயேசுவே...**

**விளக்கம்:** வாழ ஒரு வீடு கிடைக்கவில்லை. வறுமை துணையானது பிழைக்க ஒரு தொழிலில்லை. படுக்க பஞ்சு மெத்தையில்லை. படிக்க புத்தகமில்லை. குடிக்க சுத்தமான தண்ணீர் இல்லை. உடுத்த சரியான உடை இல்லை. இறப்புக்கூட இயேசுவுக்கு இனிமையானதாக இல்லை. இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு வரை இனிமையான நிகழ்வுகள் எதுவுமில்லை. ஒட்டுத் துணிகூட சேர்த்து வைக்காத ஓட்டாண்டியாய் தான் இயேசு இருந்தார். இந்த சமூகம் ஏற்றத் தாழ்வுகளை கடந்த சமூகமாக இருக்க வேண்டும் என்பதில் தன்னையே கரைத்துக் கொண்டு கற்புரமானவர் இயேசு. தனக்காக எதுவுமின்றி இந்த சமூகத்துக்காக தீப்பந்தமாக எரிந்து வெளிச்சம் கொடுத்தவர் இயேசு. சுட்டெரித்த சூரியன்

இன்று தன்னையே சுருக்கிக் கொண்டது. மலராக மணம் வீசிய தென்றல் இனி வீசாது. பறவையாக வந்து வாழ்க்கை வானத்தை வசப்படுத்திய அந்த பூகம்ப விடியல் புதைகிறது. மீண்டும் மீண்டும் எழுவதற்காய்

**செபம்:** அடக்கமே வாழ்வின் தொடக்கம் மரிப்பதுதான் உயிர்ப்புக்கு வாசம் உருக விரும்பாத மெழுகுகள் ஒளி கொடுப்பதில்லை. மறைய விரும்பாத சூரியன் உதிப்பதில்லை. மடிய விரும்பாத விதைகள் முளைப்பதில்லை. மடியும்வரை நல்ல மன தைரியத்தை தா இறைவா. என்னையே மறந்து பிறருக்காக வாழும் வரம் தா. மீண்டும் மீண்டும் எழுவதற்கான பலத்தை தந்து எங்களை பாதுகாத்தருளும் இறைவா.

## ஒளியின் பாதை

### உயிர்ப்பு காலத்தில் ஒரு பக்தி முயற்சி

14 நிலைகள் கொண்ட சிலுவைப்பாதை கிறிஸ்துவின் பாடுகளையும், இறப்பையும் நாம் சிந்திக்க, தியானிக்க தவக்காலத்தில் பேருதவியாய் இருக்கின்றது. அவ்வாறே உயிர்ப்பின் காலத்தில், கிறிஸ்துவின் உயிர்ப்பையும் அதையொட்டிய நிகழ்வுகளையும், அவை நமக்கு தரும் பாடங்களையும் சிந்திக்க, தியானிக்க நமக்கு வேறு 14 நிலைகள் கொண்ட "ஒளியின் பாதை" அழைப்பு விடுக்கிறது. பெந்தகோஸ்தே திருவிழாவரை உள்ள பாஸ்கா காலத்தில், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் திருப்பலிக்கு முன்போ, அதைத் தொடர்ந்தோ நாம் இதை தியானித்து செபித்தால் உயிர்ப்பின் மக்களாய் வாழ நமக்கு ஒளி பிறக்கும்

**முதல் நிலை: இயேசு உயிர்த்தெழுகிறார் (மத் 28:1)**

சாவை வென்றவராய்,
தீமையின்மீது வெற்றிக்கொண்டவராய்,
ஒளியின் பிறப்பிடமாய்
எதிர்நோக்கின் சிகரமாய்
காட்சியளிக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உயிர்ப்பின் நாயகனே, உண்மை ஆதவனே உம் பாணியில் நாங்களும் எம் துன்பத் துயரங்களிலிருந்தும், சோதனை சூழல்களிலிருந்தும், பாவத்திலிருந்தும், தீமையிலிருந்தும், இறுதியாய் இறப்பிலிருந்தும் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையோடு எங்களை வாழச் செய்யும். ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**இரண்டாம் நிலை: காலிக்கல்லறைக்கு முன் சீடர்கள் (யோ 20:8)**

வெறுமையான கல்லறையே
விசுவாசத்தின் வித்து.
மதலேனாளும் மற்றச்சீடரும்
வெறித்து நோக்கும் வெற்றிடமான இக்கல்லறையை
அகக்கண்களில் இறுத்தி தியானிப்போம்.

**செபம்:** வெறுமைகள் எல்லாம் வெறுமையல்ல, தோல்விகள் எல்லாம் முடிவுமல்ல. நிசப்தங்களிலினின்று எழும் தெளிவுகளை உணர்ந்துக்கொள்ளவும், நிலையற்றவைகளுக்கும் நிலையானவைக்கும் வேறுபாட்டை புரிந்துக்கொள்ளவும் உம் வெற்றுக் கல்லறையிலிருந்து எமக்கு ஒளித்தாரும். ஆமென்.

(பரலோகத்தில் 1… தந்தைக்கும், மகனுக்கும்…)

**மூன்றாம் நிலை: மதலேனாளுக்கு தோன்றுகிறார் இயேசு (யோ 20:16)**

வெறுமை வீழ்கிறது,
விழிகள் திறக்கப்படுகின்றன.
போதகரே ஆண்டவரே
மீட்பரே நண்பரே
என்றெல்லாம் அழைத்த மதலேனாளும் கிறிஸ்துவை கண்டுக்கொள்ள தவறுகிறார். தன்னையே வெளிப்படுத்தும் உண்மையான கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** கவலைகள் எம் கண்களை மறைக்காது, கணப்பொழுதும் விலகாத உமை என்றும் மறவாது, வரும் சோதனைகள் அத்தனையும் உறுதியுள்ள உள்ளத்தோடு, துணிச்சலுள்ள மனத்தோடு, நீர் இருக்கும் நம்பிக்கையோடு, தெளிவான சிந்தனைகளோடு, நேரிய நோக்கோடு எதிர் கொள்ளும் வரம் தாரும். ஆமென்.

(பரலோகத்தில் 1… தந்தைக்கும், மகனுக்கும்…)

**நான்காம் நிலை: எம்மாவுஸ் சீடர்களோடு உடன் நடக்கிறார் இயேசு (லூக் 24:15)**

கலைந்த கனவுகள்,
உடைந்த மனங்கள்,
சிதைந்த சிந்தனைகள்
என உருகுலைந்த நிலையில்
தம் இல்லம் நோக்கி பயணிக்கும் சீடர்களோடு
உடன் பயணிக்கும் வழிப்போக்கர் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** தோல்விகள், துன்பங்கள், துயரங்கள் இவைகளால் மனமுடைந்து போகும் தருணங்களில் நீர் என்னோடு உடன் நடக்கிறீர் என்பதை மறந்துவிடாமல், அந்த இருளும், நிழலும் விலகும் உம் கோலும் கழியும் என்னை காக்கும், என்று உணர்ந்து வாழவும், உம் வார்த்தைகளால் என் உள்ளம் தெளிவு பெறவும் வரம் தாரும் என் இறைவா. ஆமென்.

(பரலோகத்தில் 1… தந்தைக்கும், மகனுக்கும்…)

**ஐந்தாம் நிலை: அப்பம் பிடுகையில் தன்னையே வெளிப்படுத்துகிறார் இயேசு (லூக் 24: 31)**

எங்களோடு தங்கும் என்று
அழைத்த போதினிலே
எல்லையில்லா கொடையொன்றை
பெற்றுக் கொள்ள தயாராகிவிட்டனர் அச்சீடர்கள்.
அப்பத்தை எடுத்து அதைப்பிட்டு
நன்றி கூறி அவர் தந்த அக்கணமே
தங்கள் ஆண்டவரை அங்கு கண்டுக்கொண்டனர்.
வாழ்வளிக்கும் உணவாம் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உம் வார்த்தை எம் வாழ்வாகி, எம் உள்ளங்களை பற்றியெறிய செய்யவும், அவ்வார்த்தையின் ஒளியில் எம் வாழ்வின் உறவுகள் அமையவும், அவ்வுறவுகளின் பிணைப்பில் உம் உடனிருப்பை நாங்கள் உணரவும், எங்களோடு தங்கும் நீர், எம் சகோதர சகோதரிகள் வழியாய் தங்கியுள்ளீர் என்று உளமாற நம்பவும் வரம் தாரும் எம் இறைவா. ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**ஆறாம் நிலை: மூடிய அறையில் சீடர்களுக்கு தோன்றுகிறார் இயேசு (யோ 20:19)**

பயம், தயக்கம், நடுக்கம்,
குழப்பம் என்று எல்லாம் கலந்த மனநிலையோடு
அறையில் அடைந்துகிடந்த சீடர்களை
சந்தித்து தேற்ற வருகிறார் இயேசு.
எல்லா சூழலிலும் நம்மோடு உள்ள கிறிஸ்துவை தியானிப்போம்.
**செபம்:** முயற்சிகள் வீணாகி விட்டனவோ என்ற தயக்கம், என் வாழ்வில் விடிவே இராதா என்ற குழப்பம், நான் செய்வது பலனளிக்குமா என்ற பயம் இவற்றிலிருந்து என்னை விடுவிக்கும் வல்லவரே, நீர் ஒளியாய், என் தேற்றுதலாய், வழியாய், வாழ்வாய், கலங்கரை விளக்கமாய் இருந்து இறை சித்தத்தின்படி வாழ எனக்கு வரம் தாரும். ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**ஏழாம் நிலை: பாவங்களை மன்னிக்கும் பணி தருகிறார் இயேசு (யோ 20:23)**

மனம் இழந்தவர்கள்
மீண்டும் உறுதிப்பெற்று எழவும்,
மனமுடைந்தோர் பலரை
உறுதிப்பெறச் செய்யவும்,
சீடர்களுக்கு மன்னிக்கும் ஆற்றலையும்
பணியையும் அளிக்கிறார் இயேசு.
மன்னிக்கும் மீட்பராம் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** என் பாவங்கள் உம் உறவை பாதிக்காது, உம்மில் எம்மை அதிகமாய் இணைக்க திருவுளமானவரே, உயிர்ப்பின் வாழ்வு-ஒளியின் வாழ்வு, உயிர்ப்பின் வாழ்வு-உண்மையின் வாழ்வு, உயிர்ப்பின் வாழ்வு-எதிர்நோக்கின் வாழ்வு என்பதை முழுமையாய் உணர்ந்து, நீர் அளிக்கும் பாவ மன்னிப்பிலும், மன அமைதியிலும் உம்மை கண்டு மகிழ வரம் தாரும். ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**எட்டாம் நிலை: தோமாவின் நம்பிக்கையை ஆழப்படுத்துகிறார் இயேசு (யோ 20:26)**

நம்பிக்கை குறைவு
நிலைமாறும் மனது
புரிதலில்லா அறிவு
இவற்றை தடுத்தாற்கொண்டு
தன் உயிர்ப்பின் ஒளியால்
தெளிவு தருகிறார் இயேசு.
நம்புவோர்க்கு நிலைவாழ்வளிக்கும்
இறைமகனாம் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** அறிவியல் உண்மைகள், மனித கண்டுபிடிப்புகள், இரகசிய தத்துவங்கள் என இவை இறைவனுக்கே அப்பாற்பட்டவை என்ற தவறான எண்ணங்கள் மறைந்து, எங்கும் நிறைந்த ஒளியாம் உம்மையும் நீர் தரும் உயிர்ப்பின் உண்மையையும் உணர்ந்து, புரிந்து, நம்பி வாழும் வரம் தாரும் இறைவா. ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**ஒன்பதாம் நிலை: திபேரியா கடலில் தோன்றுகிறார் இயேசு (யோ 21:1)**

விடியற்காலை
விடியாத மனங்களோடு
முடியாது என்ற எண்ணத்தோடு
கடல்மீதிருந்த சீடரை
விடியலின் ஒளியாய்,
வெற்றியின் ஊற்றாய்,
புத்தொளியோடு சந்திக்கும் வெற்றி வீரராம் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உண்மையான நம்பிக்கையின் ஒளி சுடர்விடும்போது விடியலின் வரவு தெளிவாய் தெரிந்திடும். சோர்வு, நம்பிக்கையின்மை, நிலையற்ற தன்மை. இவை உயிர்ப்பை உள்வாங்காத மனதின் அடையாளமாகும். உமது உயிர்ப்பின் உள்ளொளி பெற்றவர்களாய் வாழ்வின் சோதனைகளை சோர்வின்றி சந்திக்கவும் அவற்றை நம்பிக்கையோடு மேற்கொள்ளவும் வரம் தாரும் இறைவா. ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**பத்தாம் நிலை: பேதுருவின் முதன்மை பொறுப்பை உணர்த்துகிறார் இயேசு (யோ 21:15)**

மும்முறை கேட்ட அந்த கேள்வியால்
முகம் வாடிய பேதுரு,
தன் அழைப்பின் முழுமையை
முழுதாய் உணரும்படியாய்,
அவர் உள்ளத்தில்
தன் ஒளியை பதியச்செய்து
திருச்சபையை வழிநடத்தும் திருப்பணியை அவருக்கு தரும் திருச்சபையின் தலைவராம் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** விண்ணகத்தின் திறவுகோலை பேதுருவின் கரங்களில் ஒப்படைப்பதாய். வாக்களித்த உயிர்ப்பே, எம் வாழ்வாய், வழியாய், உண்மையாய் உள்ள நீர் உமது உயிர்ப்பினால் எம்மை ஆட்கொண்டுவிட்டீர். உம் முதன்மை சீடரின்

தலைமையில் நீர் எழுப்பிய இத்திருச்சபை எனது நம்பிக்கையின் தாயாய் என்றும் விளங்கிடவும், இத்தாயாம் திருச்சபைமீது பிள்ளையின் பாசத்தோடு நான் என்றும் வாழ்ந்திடவும் வரம் தாரும் ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**பதினோராம் நிலை: உலகெங்கும் தம் சீடரை அனுப்புகிறார் இயேசு (மத் 28:16)**

தன்னை அனுப்பினவரின் பணியை
தான் உயிர்விடும் மட்டும் நிறைவேற்றி உயிர்த்தப்பின் அதை
தம் சீடர்கள் வழியாய்
நம்மிடம் ஒப்படைக்கும்
வாழும் வார்த்தையாம் கிறிஸ்துவை தியானிப்போம்.

செபம்:

உலகிற்கு ஒளியாய், உப்பாய், இறையரசின் கருவிகளாய், மண்ணிலே மனிதம் மலர்ந்து மனங்களிலே புனிதம் நிறைய, சாட்சியங்களாய் எம்மை அனுப்பும் இறைவா, உம் உயிர்ப்பை எம் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையாய் அர்த்தமாய் கொண்டு வாழவும், அதன் வழியாய் அடுத்தவருக்கு அவ்வொளியை பகிர்ந்து தந்திடவும் அருள் தாரும். ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**பனிரெண்டாம் நிலை: விண்ணகம் எழுகிறார் இயேசு (திப. 1:9)**

தன் பணி முடிந்து
தன்னை அனுப்பியவரை
சென்றடைய தயாராய்
தன் சீடர்களுக்கு முன்மாதிரி காட்டி விண்ணெழுந்து செல்லும்
அரசராம் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** எம் வாழ்வு இம்மண்ணிலே முடிவடைவதில்லை அது உம்மை வந்தடைய விண்ணோக்கியே உள்ளது என்பதை உம் சீடருக்கும் எமக்கும் வெளிப்படுத்திய உயிர்ப்பே, நிலையற்றவைகளில் எம் மனதை செலுத்தாமல் நிலையான உம்மையும், உம் கொடையான நிலைவாழ்வையும் எதிர்ப்பார்த்து வாழ்ந்திட வரம் தாரும். ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**பதிமூன்றாம் நிலை: அன்னை மரியாளோடு ஆவிக்காய் காத்திருக்கின்றனர் சீடர் (திப 1:14)**

இதோ உன் தாய்,
இதோ உன் மகன்
என்று தன் தாயை நமக்கு
தாரைவார்த்த உயிர்ப்பின் இறைவன்
தனது ஆவியை அனுப்ப காத்திருக்கின்றார்
அன்னை மரியாளும் திருத்தூதர்களும்
ஆவியை வாக்களித்த கிறிஸ்துவை
மனதில் நிறுத்தி தியானிப்போம்.

**செபம்:** எம் வாழ்வின் அன்றாடங்களில் உமது உள்ளத்திற்கேற்ப வாழ்வதெப்படி என்று எமக்கு கற்றுத்தரும் மரியாளை, எம் அன்னையாய் மதித்து அவளோடு இணைந்து அருள் மிக பெற்றவர்களாய் ஆவியின் கொடைகளுக்காக தாகித்து காத்திருக்கும் பிள்ளைகளாய் வாழும் வரம் தாரும் இறைவா. ஆமென்.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**பதிநான்காம் நிலை: வாக்களிக்கப்பட்ட ஆவியை அனுப்புகிறார் இயேசு (திப. 2:3)**

இறையரசின் வித்துக்களாய்
ஆவியின் வீரர்களாய்
இறைவார்த்தையை சுமந்தவர்களாய்
இறைச்சித்தம் உணர்ந்தவர்களாய்
வாழ தூய ஆவியை அனுப்பும்
இறைமகனை தியானிப்போம்.

**செபம்:** ஆவியின் அனலிலே புதுப்பிறப்பாய், நாங்கள், திருச்சபையின் அரவணைப்பை உணர்ந்து வாழவும், ஆவிக்குரிய இயல்புகள், ஆவியின் கனிகள், ஆவியின் திருநிலைப்பாடுகள் என ஆவியின் மக்களாய் வாழவும், இறையரசின் கனவுகளை நீர் எம்மிலே கண்டுள்ளீர் என்பதை ஏற்றுக்கொண்டு வாழவும் வரம் தாரும் உயிர்ப்பின் ஆண்டவரே.

(பரலோகத்தில் 1... தந்தைக்கும், மகனுக்கும்...)

**திருத்தந்தையின் கருத்துக்களுக்காக செபிப்போம்**

பரலோகத்தில் - 1
அருள் நிறைந்த - 3
தந்தைக்கும் மகனுக்கும்...

**இறுதி செபம்:**
உயிர்ப்பின் ஒளியே எம் இறவைா
உன்னதர் உம் பாதுகாப்பில்
உன் அன்பின் நிழலில்
உள்ள நாளெல்லாம் வாழ்ந்து
உம்மை வந்தடையும் வரம்தாரும். ஆமென்.

# உறவுப் பாதை

முன்னுரை

சப்தமில்லாமல்
சலனமில்லாமல்
யுத்தமில்லாமல்
துயரமில்லாமல்
சாத்திரமில்லாமல்
சூத்திரமில்லாமல்
சமூக மாற்றத்திற்கான ஓர் பயணம் சிலுவைப் பயணம்
இது ஆடம்பர அரசியல்வாதிகளின் ஆர்ப்பாட்ட பயணம் அன்று
பிறந்த நாள் கொண்டாடும் தலைவனுக்காக ___ சினிமா
இரசிகர்கள் மேற்கொள்ளும் குருட்டுப் பயணம் அன்று
சுய விளம்பரத்திற்காக சில அதிகார வர்க்கத்தினர்
மேற்கொள்ளும் போராட்டப் பயணமும் அன்று
பாலைவனத்தைச் சோலைவனமாக்க
பழுதுபட்டவைகளைப் பண்படுத்த
பள்ளங்களை நிறைவு செய்ய
பரமன் இயேசு பரிவாய் மேற்கொண்ட பயணம்.
அநீதிகளை அறுத்தெரிய
தீமைகளைச் சுட்டெரிக்க
பாவ இயல்பைக் களைந்தெரிய
அறைகூவல் விடுக்கும் ஒரு பயணம்.
பூமியைப் புனிதமாக்க, மனிதனை மனிதனாக்க
புனிதன் மேற்கொண்ட புரட்சிப் பயணம்
மண்ணில் சங்கமித்த மழைத்துளிபோல்
மனிதனில் சங்கமித்த புனிதன் மேற்கொண்ட இலட்சியப் பயணம்.
ஒரு சரித்திரத்தை உருவாக்கி
பலரின் சரித்திரத்தை மாற்றிட புதிய பயணம்
அவனியை அன்பியமாக்க
ஆடுகளை அரவணைக்க
உண்மையை உயிர்ப்பிக்க
விண்ணவன் மேற்கொண்ட விந்தைப் பயணம்.

சில பயணங்கள் மகிழ்ச்சியைத் தருகின்றன
சில பயணங்கள் கவலையைத் தருகின்றன
சில பயணங்கள் மனக்கசப்பைத் தருகின்றன
சில பயணங்கள் ஆறுதலைத் தருகின்றன
சில பயணங்கள் மனநிறைவைத் தருகின்றன.

இயேசுவின் சிலுவைப் பயணம் நமக்கு என்ன தருகிறது?
இயேசுவின் சிலுவைப் பயணம் நமக்கு எதை உணர்த்துகிறது?
இயேசுவின் சிலுவைப் பயணத்தில் நாம் யார்?

பங்கேற்பாளரா
பார்த்து இரசிப்பவரா?
பரிகசிப்பவரா?
பரிதாபப்படுபவரா?

அல்லது அந்த பயணத்தில் நம்மையும் இணைத்துப் பார்ப்பவரா? என்ற கேள்விகளுக்கான பதிலைக் காண இயேசுவோடு பயணிப்போம்.

**நீதி மறுக்கப்படல்**
**பயண நிலை 1: இயேசு தீர்ப்பிடப்படுகிறார்**

**முதல்வர்: திவ்ய இயேசுவே...**
**எல்லோரும்: அதேனென்றால்...**

"என்னங்க, பக்கத்து வீட்டுல, ஏதோ பிரச்சனைப்போலிருக்கே, என்னன்னு கொஞ்சம் பாருங்க". "ஏண்டி, உன்னால சும்மா இருக்க முடியாதா? அங்க என்ன நடந்தா உனக்கென்ன? பேசாம உன் வேலையைப் பாருடி".

"பட்டப்பகல்ல பொண்ணுங்கள வம்பிழுக்கிறான் பாரு. அவனுங்கள சும்மா விடக் கூடாது. யாரும் எதித்து கேக்க மாட்டாங்குற திமிரு. இவனுங்கள முட்டிக்கு முட்டி தட்டனும்".

"ஏங்க, எதுக்குங்க உங்களுக்கு இந்த ஊர் வம்பெல்லாம்? பேசாம வீட்டுக்குள்ள வாங்க, நாம வந்த வேலையைப் பார்ப்போம்".

நாம் பிறர் துன்பத்தைக் கண்டு அதைத் துடைக்க மறுக்கிறோமா? நம் கண்முன்னே பிறர் நீதியின் பொருட்டு துன்பப்படும்பொழுது, அதைக் கண்டும் காணாமல் நமக்கென்ன, நான் உண்டு, என் வேலையுண்டு என்று சென்று விடுகின்றோமா? அப்படியென்றால் நாமும் இயேசுவை மரணத்திற்குத் தீர்ப்பிடுகின்றோம்.

அநீதிகள் மட்டுமே வளர்க்கப்படுவதால் நீதிகள் நசுக்கப்படுகின்றன. இந்த சமுதாயம் அநியாயமானது அன்று. நாம் தான் அநியாயமானவர்கள். நம்மால்தான் இந்த சமுதாயம் அநியாயமாக்கப்படுகிறது. நான், எனது, என்னுடையது என நம்மைப்பற்றி மட்டுமே சிந்திக்கும்போதும், எது நடந்தால் எனக்கென்ன என்ற குறுகிய வட்டத்தில் வாழும்போதும், பிறர் துன்பத்தைத் துடைக்க மறுக்கும்போதும் பிறருக்கு உதவ நாம் மறுக்கும்போதும் இயேசுவை மரணத்திற்குத் தீர்ப்பிடுகின்றோம்.

**சிந்தனைக்கு:** "பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள், அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்". (லூக்7:1)

**செபம்:** இயேசுவே, இறைமகனே, நான், எனது என்ற என்னைப்பற்றிய குறுகிய வட்டத்திலிருந்து வெளியேறி, பிறரின் துயர் துடைக்கும் அன்பின் கருவியாக மாறிட வரம் தாரும். ஆமென்.

**முதல்வர்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாயிரும்

**எல்லோரும்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி, எங்கள் பேரில் தயவாயிரும்

**முதல்வர்:** மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுதலை அடைவார்களாக. ஆமென்.

**சுகமான சுமை**
பயண நிலை 2: இயேசு சிலுவையை ஏற்றுக் கொள்கிறார்

**முதல்வர்: திவ்ய இயேசுவே...**
**எல்லோரும்: அதேனென்றால்...**

"என்னோட பெரிய பையன் இருக்கானே, அவன்தான் எனக்குப் பெரியச் சுமை
கல்யாணமாகாத என்னோட மூத்தப் பொண்ணுதான், எனக்குப் பெரியச் சுமை
என்னோட மாமியார்தான், எனக்குப் பெரிய பாரம்
எனக்கு எங்க வீட்டுக்காரர்தான் பெரிய சுமை
என்னோட மனைவி மாதிரிப் பெரிய சுமை யாருமே இல்ல"
சோதனைகள், வேதனைகள், கஷ்டங்கள், நஷ்டங்கள்
என வாழ்க்கையே இரணமாகிப் போகிறது நமக்கு".

"ஆண்டவா, உனக்கு கண் இல்லையா? எனக்கு ஏன்
இவ்வளவு பெரிய கஷ்டகத்தைக் கொடுத்தாய்"
என்று நம்மில் எத்தனை பேர் புலம்புகின்றோம்?.
"ஐயோ, இந்தப் பாடம் பெரிய சுமையா இருக்கே
என்னுடைய வேலை எனக்குப் பெரிய சுமையா இருக்கே
என்று எண்ணி சோர்ந்து போயிருக்கிறோமா?
சுமைகளைச் சுமந்தவர்களே வரலாற்றை படைத்திருக்கிறார்கள்.
சிலுவை அனுபவம் ஒரு சுமைதான். ஆனால் மீட்பின்
சுமைகளும், சுவைகளும் நாணயத்தின் இரு பக்கங்கள்,
சுவைகளை விரும்பும் நாம் சுமைகளை மறுப்பதேன்?
நமது சுமைகளை நாமே சுமக்க பழகிக் கொள்வோம்.

முடிந்தால் பிறரின் சுமைகளையும் ஏற்றுக்கொண்டு பயணிப்போம்.
அந்தப் பரமனின் பாதச் சுவட்டினில் பயணித்தால், நமது சுமைகளும் சுகங்களாகும்.

**சிந்தனைக்கு:** "பெருஞ்சுமை சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்". (மத் 11:28)

**செபம்:** இயேசுவே, இறைமகனே பிறருக்காக வாழ்வதிலும், பிறரின் சுமையை விரும்பி சுமப்பதிலும் மகிழ்வடைய வரம் தாரும். ஆமென்.

**முதல்வர்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி…

## சவால்கள்

பயண நிலை 3: இயேசு முதல் முறை தரையில் விழுகின்றார்

**முதல்வர்:** **திவ்ய இயேசுவே…**
**எல்லோரும்:** **அதேனென்றால்…**

"இந்த முறை நல்லா தானே படிச்சிட்டு போனேன் திரும்பவும் எப்படி கணக்குல பெயிலாயிட்டேன்? ஐயோ கடவுளே, எனக்கு ஏன் இந்த சோதனை? என்னால முன்னுக்கு வரவே முடியாதா? எனக்கு மட்டும் நல்ல வாய்ப்பே வராதா?" இப்படி எண்ணிக்கொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டிருப்போர் நம் சமுதாயத்தில் இல்லாமல் இல்லை. "பக்கத்து வீட்டுக்காரனைப் பாரு, அவன் செய்யாத அக்கிரமமா? ஆனா, அவன் காரு, பங்களானுன்னு சந்தோசமா இருக்கான். நான் நல்லவான இருந்து என்ன பிரயோசனம்?" என்று சொல்லி, செய்கின்ற தவற்றிற்கெல்லாம் விளக்கம் சொல்கிறோமா? சோதனைகள் எல்லாம் எனக்குத்தான் வரும் என்று அங்கலாய்த்து வாடிப்போயிருக்கிறோமா? வாழ்க்கையே போர்க்களம், வாழ்ந்துதான் பார்க்கனும், கீழே விழுவது தவறல்ல, விழுந்த ஒவ்வொரு முறையும் எழுந்து நடக்காததே தவறு.

சோதனைகள் என்றும் சொந்தங்களாவதில்லை, துன்பங்கள் என்றும் தொடர்வதில்லை, வாழ்வினில் வரும் சோதனைகளைச் சவால்களாய் ஏற்றுக் கொள்வோம். சவால்களைச் சந்திக்கின்றவன் தான் சாதனையாளராகிறான். சோம்பலைக் கைவிடு, உன் சாம்பல்கூட சாதனைப் படைக்கும். சோதனையில் வீழ்ந்து கிடக்கும் நம்முன் வைக்கப்படுகின்ற சவால்களைச் சந்திக்கப் புறப்படுவோம்.

**சிந்தனைக்கு:** "சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" (லூக் 22:40)

**செபம்:** சாதனைப் படைத்த இயேசுவே, அன்றாட வாழ்வில் நாங்கள் எதிர்கொள்ளும் சோதனைகளை குறிப்பாக, ஆன்ம வாழ்விற்கு எதிராக வரும் சோதனைகளை, செபத்தின் வழியாக வெற்றிக் கொள்ள துணைபுரியும். ஆமென்.

**முதல்வர்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி…

## அன்னை ஓர் ஆலயம்

பயண நிலை 4: தாய் மகனைச் சந்திக்கிறார்

**முதல்வர்:** **திவ்ய இயேசுவே…**
**எல்லோரும்:** **அதேனென்றால்…**

"இந்த வயசானக் காலத்துல உனக்கெதுக்கம்மா, இதெல்லாம், பேசாம போடுறத சாப்பிட்டு இருப்பியா"
"எங்கம்மா பயங்கர லொல்லுடா அதசெய்யாத, இதசெய்யாத என்று பழைய பஞ்சாங்கமா இருக்குது"
"என்னங்க, நான் எத செய்தாலும் உங்கம்மாவுக்குப் பிடிக்கமாட்டேங்குது. பேசமா அவங்கள, உங்க தம்பி வீட்டுக்கு அனுப்பிடுங்க. கிழவி உயிரோட இருந்துக்கிட்டு நம்ம உயிர வாங்குது.
"அம்மா என்றழைக்காத உயிரில்லையே, அம்மாவை வணங்காத உயிரில்லையே"
நேரில் நின்று பேசும் தெய்வம் பெற்ற தாயின்றி வேறேது இங்கு"
அம்மா என்ற வார்த்தைக்குள் அவனியே அடங்கும்.

அன்பின் சிகரம் அம்மா
பண்பின் பாசக்கரம் அம்மா
பாசத்தின் பொக்கிஷம் அம்மா.
ஆனால், நம்மில் எத்தனைப்பேர் பெற்றோரை மதிக்கிறோம், தாயிக்கு சமமான மாமியாரை எப்படி நடத்துகிறோம்? முகத்துக்கு முன்னால் அத்தை, அம்மா என்று குழைந்து குழைந்து பேசிவிட்டு, "என் மாமியார் இருக்கே பொல்லாதது" என்று பிறரிடம் சொல்லி முதுகில் குத்திக் கொண்டிருக்கிறோம்?

“மாமியார் பற்றி” பக்கத்து வீட்டுப் பெண்களிடம் வெட்டிக் கதை பேசி, நாம் கெடுவதோடு மட்டுமல்லாமல், பிறரையும் கெடுத்துக் கொண்டிருக்கிறோமா? இயேசுவின் வாழ்வில் மரியாள் முக்கிய பங்கு வகிக்கிறாள். எனவேதான் அவரை நேசிக்கும் நமக்கு, அன்னையாக மரியாளை இறைமகன் கொடுத்தார். நமது வாழ்வில் நம் பெற்றோருக்கு எத்தகைய முக்கியத்துவம் கொடுக்கிறோம்?

**சிந்தனைக்கு:** “குழந்தாய், உன் தாய் தந்தையின் முதுமையில் அவர்களுக்கு உதவு. அவர்களது வாழ்நாளெல்லாம் அவர்களது உள்ளத்தைப் புண்படுத்தாதே” (சீராக் 3:12)

**செபம்:** அன்னைக்குக் கீழ்ப்படிந்து கானாவூர் புதுமையினைச் செய்த இயேசுவே, உம்மைப்போல் நாங்களும் பெற்றோரைப் போற்றுபவர்களாகவும், அவர்களை மனம் நோகச் செய்யாதவர்களாகவும் வாழ வரம் தாரும். ஆமென்.

**முதல்வர்:** எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி...

## எத்தனை நிறங்களில் மனிதர்கள்

பயண நிலை 5: சீமோன் இயேசுவுக்கு உதவுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**
**எல்லோரும் : அதேனென்றால். . .**

“அந்தா, அங்க போறாரே, ரொம்ப தங்கமான மனுஷன்யா. உதவின்னு யார் போய் கேட்டாலும் முகம் சுளிக்காம செய்வாரு”. “இவன் இருக்கானே பல்ல இளிச்சிக்கிட்டு, சரியான கஞ்சன். எச்ச கையாலகூட காக்கா ஓட்ட மாட்டான்.”

“அவ உனக்கு பத்து ரூபா கொடுத்தான்னா, இருபது பேர்கிட்ட சொல்லி காட்டுவா.”

மனிதன் என்பவன் தெய்வமாகலாம், வாரி வாரி வழங்கும்போது வள்ளல் ஆகலாம். வாழை போல் தன்னைத் தந்து தியாகி ஆகலாம்.

நாம் எப்படி வாழ்கிறோம்? வள்ளலாகவா, வாழையாகவா, கஞ்சனாகவா, பிறரிடம் எதிர்ப்பார்த்து உதவி செய்பவராகவா, எரிகிற வீட்டில் பிடுங்கின மட்டும் இலாபம் என்று பிறர் துன்பத்தில் இன்பம் காண்கிறோமா? “அவனுக்கு நான் எதுக்கு உதவி செய்யனும்? அவன் எனக்கு யாரு?” என்று நமக்குள்ளே வினா எழுப்பி, விடை கண்டு நம்மைச் சுற்றி ஒரு குறுகிய வட்டமிட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?

“அவனுக்கு நான் அதைச் செய்தேன், இதைச் செய்தேன், உதவி செய்கிறேன்”, என்று சொல்லி விளம்பரம் தேடிக் கொண்டிருக்கிறோமா? நம்மால் முடிந்தவரை பிறருக்கு உதவிடுவோம். உதவிட முடியாவிட்டாலும் உபத்திரமாவது செய்யாமலிருப்போம்.

**சிந்தனைக்கு:** “நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்”. (மத். 7:2)

**செபம்:** உதவிடும் வள்ளலே! கொடுப்பதன் இன்பம் பெறுவதில் இல்லை; எனவே தந்தேன் என்னையே; அன்புடனே ஏற்று என்னை அன்பின் கருவியாக்கும் இறைவா! ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும் . . .

## பூவே பூச்சூடவா

பயண நிலை 6: இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

“அந்தப்பொண்ணு பார்க்கத்தான் அமைதி, வாயாடுச்சின்னா பஜாரி.
பக்கத்து வீட்டு பொண்ணு இருக்காளே, அவ சரியான பசப்புக்காரி.
காலங்காத்தால கௌம்பிட்டா பாரு மினுக்கிக்கிட்டு”

மங்கையராக பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமென்றான் கவிமணி. மனிதகுலம் முழுவதையும் இயக்குகின்ற சக்தி தன்னகத்தே இருந்தும், இன்றும் பெண்கள் அடிமைகளாகவே இருக்கின்றார்களே. ஏன்? நம்மை அடிமைகளாக ஆக்கியது யார்? ஆண்களா? இந்த சமுதாயமா? இரண்டும் இல்லை. நாமே தான் நமக்கு அடிமை விலங்கிட்டுக் கொண்டோம். . .

ஐயோ! நான் பொண்ணு. என்னால எதுவும் செய்யமுடியாது என்று நாம் தட்டிக் கழிப்பதனாலேயே இந்த சமூகம் நம்மை பகட்டுப் பொருளாக, போதைப் பொருளாக, சொன்னதைச் செய்யும் கிளிப் பிள்ளையாக மாற்றிவிட்டது.

அவ 8,000 ரூபாய்க்கு பட்டுப்புடவ எடுத்திருக்கா. நான் 10,000 ரூபாய்க்காவது புடவ எடுக்கனும். அவ 3 பவுன்ல செயின் வாங்குனா, நான் கல்லு வைச்ச டாலர் வாங்கனும். இப்படி பிறரைப் பார்த்து வாழ்வதை விட்டு, நமது வாழ்வினைச் சற்று கண்ணோக்குவோம். இருப்பதைக் கொண்டு நிறை வடைவோம். “பெண் என்பவள் பேராசைப் பிடித்தவள்”, என்ற கூற்றினை முறியடிப்போம். பெண் என்று சொல்லி அடிமை விலங்கிடுவதை முறியடிப்போம். ஒண்டிக்கிடந்ததும் ஒதுங்கியிருந்ததும் போதும், புது உலகம் படைத்திட துணிவுடன் விரைவோம்.

**சிந்தனைக்கு:** "ஒழுங்கமைதி உடைய இல்லத்தில் விளங்கும் நல்ல மனைவியின் அழகு ஆண்டவர் உரையும் உயர்வானில் எழும் கதிரவனைப்போன்றது". (சீராக் 26:16)

**செபம்:** பெண்மையை வாழ்த்திய இயேசுவே! பெண்மையின் பெருமையை நாங்கள் உணர்ந்திடவும், அதற்கேற்ற செயல்களில் முனைப்புடன் ஈடுபடவும் அருள்தாரும் ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும் . . .

**பாவமன்னிப்பு**

பயண நிலை7: இயேசு இரண்டாம் முறை விழுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

"எனக்கு கோபம் வந்தா உன்ன என்ன செய்வேன்னு தெரியாது; மரியாதையா இங்கிருந்து போயிடு".

"அந்த கடவுளே வந்து சொன்னாலும் நான் இவனை மன்னிக்க மாட்டேன். அவனை வெட்டிட்டு செயிலுக்குப் போனாதான் என் ஆத்திரம் அடங்கும்".

அன்பால் இவ்வுலகை ஆளலாம். "அன்பு அழுக்காறு கொள்ளாது. தன்னலத்தைத் தேடாது; வர்மம் வைக்காது; சீற்றத்திற்கு இடம் தராது; பிறர்மீது நல்லெண்ணம் இழப்பதில்லை; அனைத்தையும் தாங்கிக் கொள்ளும்". (1கொரி 13:7)

சில வேளைகளில் அன்பினை மறந்து ஆத்திரப்பட்டு, பின் அவதியுறுகிறோம். கோபத்தில் குணம் கெட்டு, பிறரை மன்னிக்கக்கூட மனமில்லாது அலைகிறோம். பிறரை மன்னிக்க மறுக்கும் போதெல்லாம், கோபத்தில் பிறரை வஞ்சிக்கும் போதெல்லாம் நாம் கீழே விழுகிறோம். நான் என்ற ஆணவம் எப்போதெல்லாம் தோன்றுகிறதோ, அப்பொழுதெல்லாம் எழ இயலாதவர்களாய் கீழே விழுந்து கிடக்கிறோம். பகைவரையும் மன்னித்த பரமன் இயேசுவின் பாதையில் பயணிக்கும் நாம் எப்படியிருக்கிறோம்?

**சிந்தனைக்கு:** "ஏழு முறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்லுகிறேன்". (மத் 18:22)

**செபம்:** மன்னிப்பின் தெய்வமே! பகைமையே மனிதனை விலங்கினமாய் மாற்றுகிறது என்பதை உணர்ந்து, அதனின்று மீண்டெழுந்து, பிறரை மன்னிக்கும் மனத்திடம் பெற அருள்தாரும்ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும் . . .

**தட்டுங்கள் திறக்கப்படும்**

பயண நிலை 8: இயேசு பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

"இன்டர்வியூக்கு இன்னும் 4 நிமிடம் கழிச்சு போ, இப்ப ராகு காலம்"

"பையனுக்கு உடம்புக்கு முடியலையா. . . அங்க ஒரு இடத்துல தாயத்து கட்டுறாங்களாம். அங்க போங்க சரியாப் போயிடும்".

"ஐயோ, யாரோ எங்க வீட்டுக்கு சூனியம் வச்சிட்டாங்க. எங்க வீட்டுக்கு எதுவும் நல்லதே நடக்க மாட்டேங்குதே".

எனக்காக அழ வேண்டாம். உங்களுக்காக, உங்கள் பிள்ளைகளுக்காய் அழுங்கள் என்கிறார் இயேசு.

குழந்தைகளைச் சரியான பாதையில் வழி நடத்தத் தவறிய குற்றத்திற்காய் அழுவோம். பிள்ளைகள் தவறு செய்யும்போது கண்டித்துத் திருத்தாமல், அந்த தவற்றை நியாயப்படுத்திய குற்றத்திற்காக மனம் வருந்தி அழுவோம்.

பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாமல் சுற்றித் திரிந்து வெட்டியாக பொழுதைப் போக்கிய தவற்றிற்காகவும், கிறிஸ்தவனாக வாழ்ந்தும் பில்லி, சூனியம், மாயம், மாந்திரீகம் இவற்றின்மேல் நம்பிக்கை வைத்திருக்கும் குற்றத்திற்காகவும் மனம் வருந்தி அழுவோம்.

நல்ல நேரம், கெட்ட நேரம் பார்த்து வேலையைத் துவங்கும் பைத்தியக்காரத்தனத்திற்காக மனம் வருந்தி அழுவோம்.

கல் நெஞ்சக்காரர்களாய் கடமையை மறந்து, மறுத்து, வாழ்ந்த குற்றத்திற்காக மனம் வருந்தி அழுவோம்.

**சிந்தனைக்கு:** "கடவுளே! நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை". (திபா. 51:17)

**செபம்:** ஆறுதலின் ஊற்றே இறைவா! அர்த்தமற்ற காரியங்களுக்காக மனம் வருந்தாமல், உம்மிடமிருந்து எம்மைப் பிரிக்கும் பாவச் செயல்களுக்காக வருந்திட வரம் தாரும் ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும். . .

**புதிய பாதை**

பயண நிலை 9: இயேசு மூன்றாம் முறை விழுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

“எப்படியாவது நான் பெரிய ஆளாகனும். எந்த வழியில வேணா சம்பாதிக்கலாம். எனக்கு பணம்தான் முக்கியம். இந்தமுறை 100 ரூபாய்க்கு லாட்டரி வாங்கி இருக்கேன். கண்டிப்பா எனக்கு பரிசு விழும்.”

குறுக்கு வழிகளில் பணம் சேர்க்க நினைக்கிறோமா? அல்லது குறுக்கு வழிகளில் பணம் சம்பாதிக்கிறோமா? நாம் குறுக்குப் பாதையில் பயணம் செய்கின்ற ஒவ்வொரு நிமிடமும் கீழே விழுந்து கிடக்கிறோம். தன்னம்பிக்கை அற்றவனாக, அற்றவளாக, சொந்த உழைப்பை மறந்து, லாட்டரி சீட்டினை வாங்கி வைத்துக்கொண்டு குலுக்கல் நாளை எண்ணிக் கொண்டிருக்கிறோமா? எப்படியாவது சம்பாதிக்க வேண்டும். அதற்காக பிறரை ஏமாற்றினாலும் தவறில்லை என்று பிறரை ஏமாற்றி பணம் சேர்க்கிறோமா?

ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது உழைப்பே செல்வத்தைச் சேர்க்கும். எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையல்ல; இப்படித்தான் வாழ வேண்டும் என்பதுதான் வாழ்க்கை. பணத்தாசையால் குறுக்கு வழியில் வீழ்ந்து கிடக்கும் நாம் இறைவனில் நம்பிக்கை வைப்போம். முயன்று உழைப்போம்; புதிய பாதைகள் நமக்காய் உருவாகும்.

**சிந்தனைக்கு:** “எங்கே உங்கள் செல்வம் உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்”. (மத் 6:21)

**செபம்:** நிலைவாழ்வின் ஆதாரமே இறைவா! நிலையில்லா உலகிலே, நிலையற்ற உறவு, நிறைவை அளிக்க, செல்வத்தைத் தேடாமல், விலைமதிப்பிடவியலா செல்வம் நீரே என உம்மையே பற்றி வாழ வரம் தாரும்ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும். . .

## ஒரு வீணை விறகாகிறது

பயண நிலை 10: இயேசுவின் ஆடையை உரிகிறார்கள்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

“தான் பெரிய ஆளுன்னு நினைப்பு அவனுக்கு”.
“அவ நம்மையெல்லாம் மதிக்க மாட்டா, பணக்காரத்திமிரு அவளுக்கு”.

“நேத்து பொறந்த பையன். நீ சொல்றத நான் கேட்கனுமா? இங்க நான்தான் மூத்தவன். நான் சொல்றதத்தான் நீ கேட்கனும். நான் எவ்வளவு பெரிய ஆளு? என்னையே மதிக்கமாட்டாங்கறானா அவன்”?

நம்முடைய பண அதிகாரத்தால், பதவியின் பெயரால், நான்தான் பெரியவன். எனக்கு மிஞ்சி எதுவும் நடக்கக் கூடாது என்று சொல்லி, அனைவரையும் நமக்குக்கீழே அடிமைப்படுத்த நினைக்கிறோமா?

விண்ணக அரசனின் ஆடைகள் தசைகளோடு உரியப்படும்போதும், பொறுமையின் உருவமாய் வீற்றிருக்கும் இயேசுவை உற்றுநோக்குவோம். அவரில்தான் எத்தனை தாழ்ச்சி? நான்தான் பெரியவன். எனக்குத்தான் எல்லா உரிமையும். நான்தான் இங்க சீனியர் ஸ்டாஃப். என்ன கேட்டுட்டுத்தான் எல்லாம் நடக்கனும், என்று நமக்குக் கீழே உள்ளவர்களை அடிமைப்படுத்துகிறோமா?

உங்களுள் தலைவனாய் இருக்க விரும்புகிறவன், பணியாளனாய் இருக்கட்டும் என்பதை மறந்து போனோமா? நம்மை பிறர் உயர்வாக எண்ண வேண்டும் என்பதற்காக, நம்மைச்சுற்றி எப்போதும் ஒரு துதிபாடும் கூட்டம் இருக்க வேண்டுமென எண்ணுகிறோமா?

தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்
தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்பதை

மறந்துபோனோமா? பணம் என்னிடம் நிறைய இருக்கிறது என்ற மமதையில் வாழ்கின்றோமா? பணமும் பொருளும் புகழையும், அந்தஸ்தையும் தரலாம். நல்ல மனிதராக அது நம்மை உருவாக்காது. நம்மை நாமே தாழ்த்திக்கொள்வோம். எளியவராய் வலம் வருவோம்.

**சிந்தனைக்கு:** “தம்மைத் தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர் தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப் பெறுவர்” (மத் 23:12)

**செபம்:** தாழ்ச்சியால் மனுவுரு எடுத்த இயேசுவே! உமது பிறப்பின் உண்மையை அறிந்து. தான் என்ற நிலையை விடுத்து, பிறர் என்னும் மனநிலையுடன் தாழ்ச்சியில் உயர்வு காண வரம் தாரும் ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும். . .

## உனக்காக எல்லாம் உனக்காக

பயண நிலை 11: இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

“யாரு அவனா? அவன் ரொம்ப மோசமானவனுங்க அவன்கிட்ட சகவாசம் வச்சிக்காதீங்க”.

“அவளா? இந்த காரியத்த கண்டிப்பா செஞ்சிருப்பா”.

“சொத்த ஓரவஞ்சன இல்லாம எனக்கு பிரிச்சுத் தரல, உன்ன உண்டில்லன்னு ஆக்கிடுவேன்”

“என் பையன் நல்லா படிச்சிருக்கான். வரப்போற மூதேவி 50 பவுன் குறையாம கொண்டாரச் சொன்னா என்ன?”

“அவனைத்தவிர இந்த மோசமான காரியத்த யார் செய்வா? அவனப்பத்தி நமக்குத் தெரியாதா என்ன?”

பிறரைப்பற்றி இல்லாதது பொல்லாதது கூறும்பொழுதெல்லாம் இயேசுவை சிலுவையில் அறைகிறோம்.

மண்ணாசை, பொன்னாசை, பொருளாசைக் கொண்டு வாழ்கிறோமா? மண்ணாசையினால் அண்ணன், தம்பிக்குள்ளே சண்டைகள்.

“அம்மா இறந்ததுக்கப்புறம் அவங்க போட்டிருக்கிற இரட்டைவடம் செயின் எனக்குதான்”, என்று பொன்னாசையினால் அக்கா தங்கைகளுக்கிடையே பூசல்கள்.

“உங்கள் ஆன்மா வலுவுள்ளதுதான். ஆனால் ஊனுடல்தான் வலுவற்றது”, என்கிறார் இயேசு. அலை இல்லா கடலும், ஆசையில்லா மனமும் அரிது. ஆசையை அடக்கி ஆள்வதுதான் புத்திச்சாலித்தனம். ஆசையை அடக்கத் தெரியாமல், மிருகமாய் மாறி தவறு செய்யும் போதெல்லாம் இயேசுவை சிலுவையில் அறைகிறோம். நமது பேராசைக்கொண்ட எண்ணங்கள், பிறரை இழிவாக பழித்துக் கூறுதல் இவற்றை விட்டுவிட்டு, இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்வோம்.

**சிந்தனைக்கு:** “செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட, ஊசியின் காதில், ஒட்டகம் நுழைவது எளிது”. (மத் 19:24)

**செபம்:** இறைவா! ஆசையே துன்பத்திற்குக் காரணம், ஆசை விடுத்த மனிதராக அமைதியோடு வாழவும், இறையரசு என்னும் அமைதியின் அரசை நாங்கள் உரிமையாக்கிக்கொள்ளவும் வரமருளும் ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும். . .

## நல்லவன் வாழ்வான்

பயண நிலை 12: இயேசு ஆவியைக் கையளிக்கிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

“நல்ல மனுஷன்யா! அவனுக்கெல்லாம் சாவு வந்திருக்கக் கூடாது”.

“சனியன் இவனெல்லாம் இருந்தா என்ன? செத்தா என்ன? இவன் உயிரோட இருந்து மனுஷன் கழுத்தறுக்கறதுக்கு பதிலா, செத்து தொலைஞ்சதே மேல்”.

“ரொம்ப சின்ன வயசு, அவனுக்குப்போய் இந்த முடிவு வந்திருக்கக் கூடாது”.

ஒருவன் இறந்தால்தான் அவனைப்பற்றிய மதிப்பீடுகள் தெரியும் அவன் நல்லவனா கெட்டவனா என்று. நாம் இறந்த பிறகு நம்மைப்பற்றி பிறர் எப்படி கூற வேண்டுமென வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவனுக்கெல்லாம் சாவு வந்திருக்கக் கூடாது என்றா? சனியன் அவன் இருந்தா என்ன? செத்தா என்ன என்றா? நாம் இறந்த பின்னும் மக்களின் மனதில் நிலைக்க வாழ்கிறோமா? அல்லது பிறர் தூற்றும் வண்ணம் வாழ்கிறோமா? பிறருக்காக வாழ்பவன் இறந்தும் வாழ்கிறான். மனுக்குல மீட்புக்காக தன்னையே அர்ப்பணித்தார் இயேசு. ஆனால் நாம் எப்படி வாழ்கிறோம்? பிறரை வாழ வைக்கிறோமா? பிறரை அழிக்க நினைக்கிறோமா?

**சிந்தனைக்கு:** “தன் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டு தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக்கொள்வர். (மத். 10:39)

**செபம்:** இறப்பிலும் பிறர் அன்பை உணர்த்திய இயேசுவே! உம்மைப்போல் பிறரன்பு சேவையால் இறந்தும் உயிர்வாழ்பவர்களாய் மாறிட, வரம்தாரும் ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும் . . .

## குடும்பம் ஒரு கதம்பம்

பயண நிலை 13: அன்னை மடியில் இயேசு

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

பக்கத்து வீடு, வீடாவா இருக்கு, எப்ப பார்த்தாலும் ஒரே சண்டை சச்சரவு. அங்க இருக்கறவங்க மனுஷங்களா? மிருகங்களா?

என் குடும்பத்தையா குறை சொல்ற, உன் குடும்பத்தை சந்திசிரிக்க வைக்கல, என்பேரை மாத்திக்கிறேன்.

ஏங்க தயவு செய்து வீட்டுக்குள்ள வாங்க, ஏன் இப்படி ஒன்னுமில்லாத விஷயத்துக்கெல்லாம் ரோட்ல நின்னு கத்தறீங்க.

“நமது குடும்பமும் இருக்குது பாரு. அந்தக் குடும்பத்தையும் பாரு. ரொம்ப தங்கமான குடும்பம் அந்தக் குடும்பத்தப்போல எப்போதாவது இப்படி நல்ல பேர் வாங்கியிருக்கிறோமா?

யாரு அந்த குடும்பமா? ஐயோ! ரொம்ப பொல்லாத குடும்பம். அந்த வீட்டுக்காரம்மா இருக்கே, குழாய் சண்டையில, தெருச் சண்டையில ஒன்னா நெம்பர். இப்படிபெயர் வாங்கி இருக்கிறோமா? நமது குடும்பத்தைப் பிறர் நன்றாக எண்ண வேண்டும் என்பதற்காக வெளியில் மட்டும் பகட்டாக அலைகிறோமா? நமது குடும்பத்திற்குள்ளேயே எத்தனை பூசல்கள்? எத்தனை பிளவுகள்?

எங்க தாத்தா காலத்திலிருந்தே அவங்ககிட்ட தகராறு. அதனால நாங்க அவுங்க கூட பேசமாட்டோம் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறோம். மாமியார்மருமகள் பிரச்சனை, அண்ணன் தம்பி தகராறுகள் எத்தனை? கிறிஸ்தவ குடும்பத்தில், பெற்றோர்கள் தங்கள் கடமையை சரிவர நிறைவேற்றுகிறார்களா? பிள்ளைகள் எத்தனைப்பேர் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து மதித்து வாழ்கிறார்கள்.?

யோவ் பெரிசு, எப்ப பார்த்தாலும் எங்களுக்கு அட்வைஸ் சொல்லாதே. அது உங்க காலம். இப்ப காலம் மாறிப்போச்சு என்று வசனம் பேசிக்கொண்டு இருக்கிறோமா? தனிமரம் தோப்பாகாது, தனிப்பூ மாலையாகாது. கோர்க்கப்படும் பூக்களே மாலையாகிறது நமது குடும்பம் கதம்பமாக இருக்கட்டும். சண்டை, சச்சரவு நிகழ்வது இயற்கை. அதை அன்பினால் நீக்கிடுவோம். சண்டை சச்சரவுகளை நீயா? நானா? என்ற ஆணவத்துடன் எதிர்கொண்டால் போட்டியும் பொறாமையும் வெளிப்படும். அங்கே அமைதியும் சமாதானமும் இருக்காது. நசரேத்தூர் இயேசுவின் குடும்பத்தில் நிகழ்ந்த அமைதி, மகிழ்ச்சி, நம்மில் மலர பாடுபடுவோம்.

**சிந்தனைக்கு:** “பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்”. (லூக் 6:31)

**செபம்:** இறைச்சித்தமே எம் பாக்கியம் என்று மீட்பு திட்டத்தில் தம்மை முழுமையாய் அர்ப்பணித்திட்ட திருக்குடும்பமே! எம் குடும்பங்களும் அப்பேற்றினை அடையும் வழிகளை அறிந்து வாழ்வில் செயல் படுத்திட வரமருளும் ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும். . .

## வாழ்வின் தத்துவம்

பயண நிலை 14: இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே. . .**

**எல்லோரும் : அதேனென்றால். . .**

நான் என்ன பண்றேன்னு எனக்கே புரியல, ஒரே பிரச்சனையா இருக்கு. எந்தப் பாடத்த எடுத்துப் படிக்கிறதுன்னு ஒரே குழப்பமா இருக்கு. என்னால எதுவும் முடியாது. எனக்கு அவன மாதிரி எந்த திறமையும் இல்ல.

போனால் போகட்டும் போடா
இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா. .
கண்போன போக்கிலே கால் போகலாமா
கால்போன போக்கிலே மனம் போகலாமா
மனம்போன போக்கிலே மனிதன் போகலாமா
மனிதன் போன பாதையை மறந்து போகலாமா. . .

ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்று
ஏனோதானோன்னு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
நமக்கென்று எந்த ஒரு குறிக்கோளும் இல்லாமல் வாழ்கிறோம்
மனம் போன போக்கிலே போய் மக்கிக் கொண்டிருக்கிறோம்
உயர்வான இலட்சியம் நம் கண்முன் இல்லை.

ஐயோ, அந்த மாதிரி வாழ்க்கையிலே போனா எனக்கு சோதனை வரும். எனக்கு கஷ்டங்களைத் தாங்குகிற சக்தி இல்லை என்று சொல்லி கோழையாக நம்மை நாமே தன்னம்பிக்கையற்றவர்களாக மாற்றிக்கொள்கிறோம். பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், சந்தித்தோம், சாதித்தோம், இறப்போம் என்றிராமல், வாழ்வின் சோதனைகளை மேற்கொள்வோம். நம் வெற்றியை நாளை சரித்திரம் சொல்லட்டும்.

நமக்குள்ளே தன்னம்பிக்கைக் கொண்டிருப்போம். நமக்கென்று இலட்சியப் பாதை ஒன்றை உருவாக்கு வோம். புதிய இலை துளிர்க்க, சருகுகள் உதிர்ந்து விழத்தானே வேண்டும். நமது பழைய வாழ்வினை உதிர்த்து விட்டு, புதிய வாழ்வினுக்காய் துளிர் விடுவோம். புறப்படுவோம் புதிய வாழ்வின் வேர்களைத் தேடி விரைவோம்.

இன்னல்கள், இடையூறுகள், சோம்பல்கள், சோதனைகள் இவற்றைப் புதைத்து விட்டு, சாதனையாளராய் மாறுவோம். புதிய பயணத்திற்காய் நம் பாதங்களைத் தயார் செய்வோம். நம் பாதங்கள் நடக்கத் தயார் என்றால், பாதைகள் மறுப்புச் சொல்லப்போவதில்லை. பாதைகள் மறுக்கவில்லையென்றால் நம் பயணங்களும் முடிவதில்லை.

**சிந்தனைக்கு:** கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத்தேடி வருகிறது. (லூக் 1:79)

**செபம்:** உயிர்த்த இயேசுவே! பாதங்கள் தடுமாறினாலும் பயணிக்கும் மீட்புப் பாதையிலிருந்து நாங்கள் விலகிடாது, தடையாய் எழுவனவற்றைப் புதைத்து, இறையரசு என்னும் புதையலைக் கண்டிட எமக்கு வரம் தாரும் ஆமென்.

**முதல்வர் :** எங்கள் பேரில் தயவாயிரும் . . .

சுடர் போட்டி முடிவுகள் 20

1. அருள் பணி ஜோஸ் புளிக்கல்
2. புத்தகம்
3. தந்தை போர்த்துகீசிய இனம், தாய் கொங்கன் இனம்
4. லூர்து நகரில் உள்ள மெசபியேல் மலைக்குகை
5. தூய அருளாந்தர்
6. 18 முறை
7. 60 க்கும் மேற்பட்ட செபமாலைகள்.
8. வீரமாமுனிவர் என்றழைக்கப்பட்ட இராபர்ட் தே நெபிளி
9. இயேசு கிறிஸ்துவே அனைத்துக்கும் நீரே ஆண்டவர். நான் உங்கள் மந்தை ஆடு, சாத்தானை ஜெயிக்க என்னை தகுதியுள்ளவராக்கும்.
10. தூய அலோசியஸ் வெர்சீலியா, தூய கலிஸ்துஸ் கரவாரியோ
11. செவாலியே டேவிஸ் முளுபு
12. இம்மாதத்திலே உங்களுக்கு தெரிந்து நீண்ட காலமாய் நோய்வாய்ப்பட்டு துன்பப்படும் ஒரு சகோதரரையோ, சகோதரியையோ சென்று சந்தித்து அவர்களோடு நேரம் செலவழியுங்கள்.
13. இரங்கலின், இரக்கத்தின்
14. இரு மாடப்புறா குஞ்சுகள்.
15. எரேமியா.